# செந்தமிழ்

தொகுதி 87 மார்ச்சு 93 பகுதி 1

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

நா. பாலுசாமி எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி., பி.எட்.

# பொருளடக்கம்

1. திருக்குறள் : இலக்கிய நோக்கு 1
பேரறிஞர் செ.வை. சண்முகம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

2. உளி என்னும் சொல் 12
பேரறிஞர் அ.மா. பரிமணம்
தஞ்சை

3. பொம்மல் ஓதியார் 19
கன்னக்குறிச்சி வை. தங்கமணி

4. தமிழ் வழக்கு 24
திரு. நாராயணையங்கார்

5. தமிழ் நூல் 28
பேரறிஞர் பெ. சுயம்பு
தமிழ்த்துறை, ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்

6. மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள் 51

# திருக்குறள் : இலக்கிய நோக்கு

— பேரறிஞர் செ.வை. சண்முகம்

## முன்னுரை

திருக்குறள் தமிழ் இலக்கியங்களுள் பல வகையில் தனித்துவம் வாய்ந்தது. சங்க இலக்கியத்தின் சத்தையும் சாற்றையும் கொண்டு புதிய யாப்பில் புதிய பாணியில் பல புதுமைக் கருத்துக்களோடு சமூக முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது. எனவே, பிற்காலப் புலவர் ஒருவர் ‘எல்லாப் பொருளும் இதன்பால் உள’ என்று பாராட்டியது வாழ்க்கையில் எல்லாப் பரிமாணங்களையும் – அறம், பொருள் இன்பம் – ஆகிய மூன்றையும் விளக்கியுள்ளதைக் குறிக்கும். இது உள்ளடக்கம் பற்றியது. அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்தது’ என்று போற்றியுள்ளமை உருவம்பற்றி மட்டும் அல்லாமல் இலக்கியச் செறிவையும் புலப்படுத்தும். ‘எப்பாலவரும் இயையவே மொழிந்த மொழி’ என்று கூறியது குறள் தமிழில் எழுதப்பட்டிருந்தாலும் உலகப் பொதுமையுடையது என்பதையும் ‘பொதுமறை’ என்பதையும் புலப்படுத்துகிறது. இதுதான் ஒருமொழி இலக்கியம் இன்னொரு மொழியில் மொழிபெயர்க்கப்படுவதன் – மொழி பெயர்ப்பு இலக்கியத்தின் அடிப்படை ஆகும். மொழி பெயர்ப்பு நிலையிலேயே திருக்குறளின் இன்னொரு தனித்துவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பிற இந்திய மொழி நூல்கள் வாழ்வின் நிலையாமையை வலியுறுத்தத் திருக்குறளோ வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உடன்பாட்டு நிலையை வலியுறுத்தும் நூல் என்று ஆல்பர்ட்டுசுவெட்சர் என்ற மேனாட்டு அறிஞரைக் கூற வைத்தது மொழி பெயர்ப்புக் குறள்களே.

இப்படிப்பட்ட குறள் பல பரிமாணங்களை உடையது. அறநூல், தத்துவநூல், இலக்கியநூல், அரசியல்நூல், இன்பநூல், வாழ்க்கைத் துணைநூல் என்று கருதும்படி பல நிறப்பட்டை கொண்ட கண்ணாடி திருக்குறள்.

இங்கு இலக்கியநூல் என்ற நோக்கில் சில கருத்துகள் விளக்கப்படும்.

## இலக்கிய நோக்கு

இலக்கியம் பொதுவாக மொழிநடையைப் பொறுத்ததாகக் கருதப்படும் அது இலக்கிய உத்திகளான தொடை, அணி, கற்பனை போன்றவற்றால் இலக்கிய உணர்வுகளைப் புலப்படுத்தி மொழிப் புலமையையும் மொழிப்பயன் பாட்டில் திறனையுமே வெளிப்படுத்தும். அந்த நிலையில் தாய்மொழியாளனுக்கு மட்டுமே இலக்கியம் பயன்படும் என்ற நிலையை அடைந்து விடும். நல்ல இலக்கியம் என்பது இலக்கியப் புலவனின் வாழ்க்கை உணர்வையும் பொறுத்தே அமையும். உலக வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற முறை, வாழ்க்கை பற்றிய மனப்பாங்கு, வாழ்க்கை மதிப்பும் மதிப்பீடும் ஆகியவைகளே நல்ல இலக்கியத்தை நிருண யிக்கின்றன; ஒரு மொழி இலக்கியத்தை உலக இலக்கியமாக்கு கிறது. இதுவே மொழி பெயர்ப்பாலும் உயர்ந்த இலக்கியமாகக் கருதப்பட வைக்கிறது. எனவே, இலக்கிய நோக்கு என்ற முறையில் குறளில் காணப்படும் சில வாழ்க்கை உணர்வையும் இலக்கிய உணர்வையும் பார்ப்போம்.

## வாழ்க்கை உணர்வு

வள்ளுவர் நல்வாழ்க்கையைப் பாராட்டிப் பேசியிருப்ப தோடு தீய வாழ்க்கையைக் குறை கூறி வாழ்க்கையைப் பல்வேறு உணர்வுகளுடன் நோக்கியுள்ளார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனை 'வானுறையும் தெய்வம்' (50) என்றும், முறை செய்து காப்பாற்றும் மன்னவனை மக்கட்கு 'இறை' (388) என்றும், பிறன்மனை நோக்காதவனைப் 'பேராண்மை' உடையவன் (148). என்றும் பாராட்டுவதன் மூலம் உலக வாழ்க்கையில் சிறந்தவர்களைப் பாராட்டியுள்ளார்.

விருந்து ஓம்புதலின் சிறப்பு, பயன் ஆகியவைகளை விளக்கி விட்டு, அதே சமயத்தில் விருந்து ஓம்பாததை 'மடமை' என்றும் ஓம்பாதவர்களை 'மடவார்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

> உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
> மடமை மடவார்கண் உண்டு (89)

இது வள்ளுவரா சொன்னார் என்று நாம் சந்தேகப்படலாம் விருந்தோம்பலில்லையே என்ற ஆதங்கம் கோபமாக மாறிக்

கடுமையான சொல்லைப் பயன்படுத்தி அவனைத் திருத்துவதே வள்ளுவரின் நோக்கம்.

தான் பொருள் வைத்திருந்தும் வறியார்க்கு ஒன்று ஈயாத வர்களை 'வன்கணவர்' (கொடியவர்) என்று கூறுகிறார்.

> ''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
> வைத்திழக்கும் வன்கணவர்'' (228)

என்பதே அந்தக்குறள். இங்கு வள்ளுவருடைய கோபம் இவ்வார்த்தைகளாக வெளிப்பட்டுள்ளது. 'சினம்' பற்றிய அதிகாரத்தில் சினத்தைத் தாழ்ந்தவர்களிடத்து அடக்காதவர் களைப் பற்றிப் பேசும் போது வள்ளுவருக்கே கோபம் வந்து விடுகிறது.

> ''செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்
> காக்கினென் காவாக்கா லென்''

என்ற 'வெகுளாமை' அதிகாரத்தின் முதல் குறளில் (301) அப்படிப்பட்ட மனிதர்களைத் துச்சமாக மதிக்கும் உணர்வை வெளிப்படுத்தி விடுகிறார்.

இவையெல்லாம் தனிமனிதனின் செயல் பற்றிய வள்ளு வரின் வாழ்க்கை உணர்வுகள்; மதிப்பீடுகள், ஓர் இடத்தில் சமூக நிலையிலே சில தீமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் பொங்கி எழுகிறார்; சபிக்கிறார் என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது.

> ''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்'' (1062)

என்ற குறள் வள்ளுவரின் வாழ்க்கை உணர்வுக்கும் இலக்கிய உணர்வுக்கும் சான்றாக அமைந்துள்ளது. 'வேண்டு' என்பது பிறவினையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (தொல். சொல். வினை.46) எனவே, 'உலகு இயற்றியான் (ஒருவரை) இரந்து உயிர் வாழ்தல் வேண்டும்' என்று பொருள்படுகிறது. ஒருவர் செய்த தீவினை காரணமாக உலகு இயற்றியான் அவரை இரந்து வாழ்தலை வேண்டியிருக்கலாம். ஆனாலும் வள்ளுவர் அப்படிப் பட்ட தண்டனை கொடுப்பதை விரும்பவில்லை என்பதாலேயே 'பரந்து கெடுக' என்று சாபமிடுகிறார் போலும். இங்கு இன்னொன்றும் சுட்டிக் காட்டத் தகுந்தது. 'உலகு இயற்றியான் யார்? என்ற கேள்வி எழுதுகிறது.

திருவள்ளுவர் உலகம் இறைவனால் படைக்கப்பட்டது என்ற கருத்து உடையவரா? அல்லது உலகம் அனாதியாக இருப்பதாகக் கருதுகிறாரா? என்ற கேள்விக்கு எனக்கு விடை தெரியவில்லை. முதல் கருத்து திருவள்ளுவருக்கு உடன்பாடு இல்லை என்றால் அரசியல், சமூக அமைப்பு ஏற்படக் காரணமாக இருந்தவர்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். எனவே, அரசியல் சமூக மாற்றம் ஏற்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம். எப்படியானாலும் ஏழைகளின் மேல் வள்ளுவர் இரக்கங்கொண்டு அவர்களுக்காகக் கோபப்படுகிறார் என்பதே முக்கியம்.

வள்ளுவர் உலகநிலையைப் பார்த்து வியப்பு அடைந்திருப்பதைப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். இங்கேயும் தனிமனித நிலையிலும் சமூக நிலையிலும் வியப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

சில மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் சில சமயங்களில் இனிய சொற்கள் இன்பம் தருவதைக் கண்ட பின்னும் வன்சொல்லைப் பயன்படுத்துகிறார்களே என்று வியப்பு அடைகிறார்.

> "இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
> வன்சொல் வழங்கு வது" (99)

என்னும் போது. 'எவன் கொலோ' என்று தன் வியப்பைத் தெரிவித்து விட்டார்.

கல்வியால் எந்த நாடும். ஊரும் தன்னுடைய நாடாகவும் ஊராகவும் ஆவதால் அந்தக் கல்விக்காக வாழ்நாள் முழுவதும் செலவிடாமல் இருக்கிறார்களே என்பதும் வள்ளுவருக்கு ஆச்சரியத்தையே தருகிறது. அதனாலேயே,

> "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
> சாந்துணையுங் கல்லாத வாறு" (897)

என்று கூறி 'என்' என்பதன் மூலம் வியப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒருவன் முதுகுக்குப் பின்னால் பழித் துரைப்பவர்கள் இன்னும் உலகில் வாழ்கிறார்களே என்ற ஆதங்கத்தை

> "அறனோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன் நோக்கிப்
> புன்சொல் உரைப்பான் பொறை"

என்று கூறி புன் சொல் உரைப்பவனின் பாரத்தை இந்த உலகம் அறம் என்று கருதி ஆற்றிக் கொண்டிருக்கிறது போலும் என்று வியப்படைந்துள்ளார்.

பொதுவாகத் தீமை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது; மனிதர்கள் வாழ்வில் உணர்ந்த உண்மைகளை முழுவதும் கடைப் பிடிக்காமல் வாழ்கிறார்கள். அறநூல் கூறுவதற்கு மாறாக உலக நடைமுறை காணப்படுகிறது. இந்த நிலையில் வாழ்க்கையையோ மனிதர்களையோ வெறுக்காமல் வாழ்க்கை முரண்கள் ஆராயத்-தகுந்தவை என்று கூறுகிறார்.

''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப்படும்'' (169)

இங்குத் தன்னுடைய அறக்கோட்பாடு தோற்றது போலக்காணப் பட்டாலும், அது மக்களுக்கு மட்டும் அல்லாமல் அறிஞர்களுக்கும் ஆராய்ச்சிப் பொருள் ஆகும் என்பது வாழ்க்கையின் ஆழத்தை வள்ளுவர் உணர்ந்ததையே புலப்படுத்துகிறது. வாழ்க்கை மேலுள்ள வள்ளுவரின் பரிவுணர்களின் வெளிப்பாடுகள் இவை.

## இலக்கிய உணர்வு

இலக்கிய உணர்வை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக் காலம் i) ஆசிரியர் கூற்றாக அமைந்த கருத்துகள். இதையும் ஓர் இலக்கிய உத்தியாகக் கருதலாம் ii) மொழிநடை உத்திகள்.

இலக்கியத்தில் கதை மாந்தர்களின் கூற்றாக வரும் தன்மை வடிவங்கள் தவிர ஆசிரியர் கூற்றாகவும் தன்மை வடிவங்கள் குறளில் இருப்பது பலராலும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. காமத்துப் பாலில் வரும் தன்மை வடிவங்கள் கதை மாந்தர்கள் கூற்றுகளாக அமைந்தவையே. அறத்துப் பாலிலும் பொருட்பாலிலும் கதை மாந்தரின், அதாவது வாசகரின் கூற்றாக வும், ஆசிரியர் கூற்றாகவும் தன்மை வடிவங்கள் காணப்படு கின்றன.

''கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்'' (116)

'ஒருவன் நடுவுநிலை நீங்கித்தீய செயல் செய்ய நினைப்பதுதான், கெடப் போகிறான் என்பதன் உற்பாதமாக அறிந்து கொள்க' என்பதே இதன் கருத்து. இங்கு 'யான்' தீய செய்ய நினைப் பவன் தன்னைச் சுட்டுகிறது.

''வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னுஞ் செருக்கு'' (844)

என்ற குறளில் ஒருவன் தன்மைத் தான் 'யாம் அறிவுடையோம்' என்று நினைப்பது புல்லறிவுடைமை என்ற கருத்தைக் கூறுகிறது. எனவே இங்கும் 'யாம் உடையம்' என்பது வாசகனை அல்லது மனிதனைக் குறிப்பிடுகிறது. மேலும் பன்மை வடிவம் பயன் படுத்தியதன் மூலம் வள்ளுவர் அவனுடைய போலித் தன்மை யைச் சுட்டிக் காட்டுகிறார். மாறாக ஆசிரியர் கூற்றாகவும் குறளில் தன்மை வடிவங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

''பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற'' (61)

என்ற குறளில் வரும் 'யாம்' என்பது ஆசிரியர் கூற்றாக அமைந்த தன்மை. உயர்வு ஒருமைத் தன்மை வடிவம். ''மக்கட்பேறு'' மானுடத்தின் தொடர்ச்சிக்குக் காரணம் ஆவது. மானுடம் தொடர்வதோடு வளர வேண்டும் என்று கருதியே 'அறிவறிந்த' என்ற அடையைப் பயன்படுத்தினார்; அந்தக் கருத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஆசிரியர் கூற்றாகத் தன்மைப் பன்மை வடிவத்தைக் கையாண்டுள்ளார்.

''மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்'' (1071)

என்ற குறளில் வந்துள்ள 'யாம், என்பது ஆசிரியர் கூற்றே. நல்லவர்களும் கெட்டவர்களும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள். அது மாதிரியான ஒற்றுமை - ஒப்புலம யாம் பார்த்ததில்லை என்பது அவருடைய வியப்புணர்வின் வெளிப்பாடு. தன்மைப் பன்மை வடிவம் இங்குக் கையாண்டிருப்பது நல்லவர்களையுங் கெட்டவர்களையும் பிரித்து அறிவது பெரியவர்களுக்கே கடின மான செயல் என்பதைப் புலப்படுத்துகிறது. இங்கு இறந்த கால வடிவத்தோடு எதிர்மறை வர முன் பாட்டில் (61) எதிர்காலம் (இறப்பல் (Non-Past) காலம்) வினை முற்றோடு எதிர்மறை வந்துள்ளதும் கவனிக்கத் தகுந்தது. பொதுவாக எதிர்கால எதிர் மறை எல்லாக் காலத்துக்கும் பொருந்துவதாகவும் இறந்த கால எதிர்மறை இதுவரை அந்தச் செயல் நடைபெறவில்லை என்ற இறந்தகால நிலையைமட்டும் உணர்த்துவதாகவும் பொருள் கொள்வார்கள். எனவே 'அறிவறிந்த மக்கட்பேறு' எல்லாப் பேறு

களிலும் உயர்ந்தது, எல்லாக் காலத்துக்கும் பொருந்தும். நல்லவர்களைப் போன்றவர்கள் தீயவர்கள் என்ற ஒற்றுமை இதுவரை காணவில்லை. இனிக் காண மாட்டேன் என்ற பொருள் அன்று.

"இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று" (1067)

என்ற குறளில் 'இரப்பன்' என்ற தன்மை ஒருமை வினை முற்று ஆசிரியர் கூற்றாக அமைந்ததே. இங்கு வள்ளுவர் யாசிப்-போரிடம் பேசுவதால் எழுவாயைக்கூட பயன்படுத்தாமல் வினை முற்றில் ஒருமை வடிவம் கையாளுவது அவர்களோடு தன்னை இணைத்துக் கொள்வதைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம். அவர்களின் அனுதாபத்தைப் பெறுவதற்கு இது முதல்படி ஆகும். அவர்களைத் தன் கருத்துக்கு இணங்க வைத்துச் செயல்பட வைக்கும் முதன் முயற்சி.

இலக்கிய உணர்வின் இன்னொரு பரிமாணம் அவருடைய மொழி நடை. இலக்கியம் மொழியை முதற்கருவியாகக் கொண்டு ஆக்கப்படுவதால் இலக்கிய மொழியை மொழி அமைப்பு நோக்கில் ஆராய்வது பல புதிய நயங்களைப் புலப்படுத்த வல்லது என்று இலக்கியத் திறனாய்வாளர் ஒரு சிலர் கண்டுள்ளார்கள்.

வள்ளுவரே சொல்வன்மை, அவையறிதல், அவை அஞ்சாமை, தூது ஆகிய அதிகாரங்களில் சொற்களின் சிறப்பு, பயன்பாடு பற்றிப் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். சொல்லின் தொகை (711), சொல்லின் நடை (7121), சொற்வின் வகை (713) என்று நேரடியாகவும், சொல் தேர்வு (பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை.645), தொடர் சுட்டு (நிரந்து இனிது சொல்லுதல் 648), ஒலிக்கட்டு (இனிது சொல்லுதல் 648, கேட்டார்ப் பிணிக்கவும் கேளார் வேட்பவும் சொல்லுதல். 643) என்று குறிப்பாகவும் நடைஆய்வுக் குறிப்புகளைத் தெரிவித்துள்ளார். இன்று நடையியலார் ஒலிக்-கட்டு, சொல் தேர்வு, தொடர்க்கட்டு என்று மொழி அமைப்பை ஆராய்ந்து அங்குப் புதைந்துள்ள இலக்கிய நயங்களைப் புலப் படுத்துகிறார்கள். அந்த முறையில் சில கருத்துக்களைப் பார்ப் போம்.

தொல்காப்பியர் தொடையின் வகைகளாக எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகியவைகளையும், வண்ணம்

என்பதில் குறுஞ்சீர் வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், வல்லிசை வண்ணம் முதலியவைகளையும் குறிப்பிட்டுள்ளார். வண்ணம் சீரையும், அடி அல்லது முழுப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டது. இவை இன்னோசை தருவதோடு குறிப்புப் பொருள் உடையவை என்று இப்பொழுது வப்புறுத்தப்படும் கருத்து ஆகும்.

ஒலிக்கட்டு

இங்கு வண்ணம் அடிப்படையில் இரண்டு செய்திகள் மட்டும் சுட்டிக் காட்டப்படும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)

என்ற குறள் வல்லிசை வண்ணம் உடையது. இது ஆசிரியரின் கடுமையான கட்டளை என்பதற்காக வல்லிசை வண்ணமும் வெட்டுச்சந்தமும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆணை என்பது பயனிலையை ஏவல் வடிவத்தில் முதலில் வைத்திருப்ப தாலும் அறியலாம்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (397)

என்ற குறளில் முதல் மூன்று சீரும் நெடுஞ்சீர் வண்ணம் உடையது. இது இழுவைச் சத்தம் உடையது. இது கல்வி கற்றவர்க்கு எந்த நாடும் ஊரும் பொதுவானது என்ற அனுபவத் தால் மெல்ல மெல்ல அறியக்கூடியது என்பதை அந்தச் சந்தம் புலப்படுத்துகிறது.

வள்ளுவர் கையாண்ட சொல் வடிவத்துக்கும் பொருளுக்கும் தொடர்பு இருப்பதையும் பல அறிஞர்கள் எடுத்துக் காட்டி யுள்ளார்கள்.

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்'' (2)

என்ற குறளில் 'தொழா அர்' என்று அளபெடை வடிவம் பயன் படுத்தியிருப்பது வாலறிவனை நெடும்பொழுது தொழ வேண்டும் என்ற கருத்தைப் புலப்படுத்துவதாக விளக்குவார்கள். ஆனால் இங்கு அளபெடை சீர் நிரப்புவதற்காகவும் பயன்படுகிறது.

ஏனென்றால் 'தொழார்' என்பது இருந்தால் ஓரசைச் சீராக ஆகிவிடும்.

> ''வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
> நாளொற்றித் தேய்ந்த விரல்'' (126)

என்ற குறளில் 'தேய்ந்த' என்பது பலவின்பால் வினை முற்றாகப் படுத்தப்பட்டுள்ளது. அதன் சரியான வடிவம் தேய்ந்தன' என்பதே. விரல்கள் தேய்ந்தன என்பதைக் குறியீடாக 'தேய்ந்த' என்ற சொல்வடிவமே காட்டி விடுகிறது. இங்கு 'தேய்ந்தன' என்றாலும் ஈரசைச் சீரே. ஆனால் முழுவடிவம் தளையைச் சிதைக்கும். இங்கு யாப்பு நோக்கில் வடிவத்தைச் சிதைத்து குறிப்புப் பொருள் உணர்த்தவும் பயன்பட்டு விட்டது.

சொல் தேர்வு

சொல் தேர்வு பலவகைகளின் ஆராயலாம். இங்கு மூன்று வகையான சொல் தேர்வுகள் குறிப்பிடப்படும். அவையாவன i) ஒரு பொருள் பல சொல்லில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் போது அது பல பொருள் ஒரு சொல்லாய் அமைந்து இரண்டு பொருளைத் தருவது ii) ஒரு சொல்லைக் 'குறியீடு' ஆகப் பயன் படுத்தி குறிப்புப்பொருளை உணர்த்துவது. iii) ஒரு பாடலில் கையாளப்படும் சொற்களின் வகை எண்ணிக்கை (type frequency).

கடை என்ற சொல் கடைநிலை, பொழுது (போது), நியதிப் பொருள் என்ற பொருளை உடையது. காலப் பொருள் பொழுது, அமையம், காலை, கடை என்பன ஒரு பொருள் பல சொல்.

> ''தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை' (964)

என்ற குறளில் 'கடை' என்ற காலத்தை மட்டும் காட்டாமல் இழிந்த நிலையைக் குறிப்பால் வெளிப்படுத்தும்.

'வேள்வி' என்ற சொல் யாகத்தைக் குறிக்கும். வள்ளுவர் விருந்தோம்புதலை 'வேள்வி' என்று குறிப்பது ஒரு குறியீடாக விருந்தோம்புதலின் பெருமையை மட்டும் அல்லாமல் அருமையையும் புலப்படுத்துகிறது.

'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்'' (88)

இங்கு 'வேள்வி' என்பது ஒரு குறியீடே.

வள்ளுவர் சொல் சிக்கனத்துக்குப் பெயர் பெற்றவர். அதனாலேயே குறள் யாப்பைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். அதற்கேற்ப மூன்று சொற்களை வைத்துக் கொண்டே சில குறள் யாத்துள்ளார்.

''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை'' (12)

இங்குத் துப்பு, ஆ (கு), மழை என்ற மூன்று சொற்கள் உள்ளன. துப்பு ஐந்து தடவையும், ஆ (கு) மூன்று தடவையும் மழை ஒரு தடவையும் வந்துள்ளன. மேலும் 'துப்பார்க்கு' என்ற வார்த்தையை (word) இரண்டு தடவை பயன்படுத்தி வார்த்தை களின் எண்ணிக்கையும் குறைத்துவிட்டார்.

''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை'' (672)

என்ற குறளில் 'தூங்கு' நாலு தடவையும் 'செய்' இரண்டு தடவையும் 'வினை' ஒரு தடவையும் கையாளப்பட்டுள்ளன. ஆனால் வார்த்தை எதுவும் திருப்புரையாக வரவில்லை. இவை யெல்லாம் ஒரு வகையில் சொற்சிலம்பே. அதே சமயத்தில் ஏழு சீரில் எட்டு வேறு வேறு சொற்களைக் கையாண்டும் சொல் வளத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

''அருமை உடைத் தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'' (6.1)

தொடர்கட்டு

தொடர்கட்டு என்பது வாக்கிய அமைப்பைப் குறிக்கும். ஓர் ஆசிரியரின் நடைச் சிறப்பைத் தொடர்கட்டு மூலமே அறிந்து கொள்ள முடியும்.

' ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'' (131)

என்ற குறளில் எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்ற முறையிலே தொடர்கட்டு அமைந்துள்ளன. வேறு பல

குறள்களில் செயப்படு பொருள் முதலாகவும் (எண்ணிய எண்ணி யாங்கு எய்துவ —666) பயனிலை முதலாகவும் (இரவார் இரப்பார்க் கொன்று ஈவர் —1035) பயன்படுத்தியது பொருள் அழுத்தத்தைக் கொடுக்கிறது. தொடர்கட்டு வேறு பல குறிப்புப் பொருளை உணர்த்த வல்லது.

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்ற குறள் இரண்டு வாக்கியங்கள். எழுவாய் + வினையெச்சம் + பயனிலை என்ற முறையில் அமைந்தாலும் மூதல் வாக்கியம் எழுவாய் எதிர்மறைத் தொடரிலும், வினையெச்சம் உடன்பாட்டு நிலையிலும், இரண்டாவது வாக்கியம் எழுவாய் உடன்பாட்டு நிலையிலும், வினையெச்சம் எதிர்மறையிலும் அமைந்த முரண் கவனிக்கத் தகுந்தது. முதல் வாக்கியத்தில் எழுவாயை எதிர்மறை யாக அமைத்தது செயத் தகாத காரியத்தைச் செய்யும் விரைவு மனப்பான்மையைக் குறிப்பாக உணர்த்துகிறது.

தொடர் சுட்டின் வலுவால் சில குறளில் குறை வாக்கிய மாய் அமைந்து வாசகர் ஒரு சொல்லை இட்டு நிரப்பிக் கொள்ளும்படி விடப்பட்டுள்ளது.

"உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
நடையரே கல்லா தவர்" (395)

என்ற குறளில் இரண்டு வாக்கியங்கள் இருந்தாலும் மூதல் வாக்கியத்துக்குரிய பயனிலை இல்லை. "கடையர்" என்ற தனான் அதன் மறுதலைப் பெயர் வருவிக்கப்பட்டது என்று பரிமேலழகர் விளக்கியுள்ளார். உண்மையில் முன்னுள்ள 'உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் என்ற தொடர் வலுவாலேயே வாசகரைத் 'தலையர்' என்ற சொல்லை ஊகித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டார், வள்ளுவர். கட்டிடத்தில், அடிப் பாகத்தின் வலுவால் முன்பாகம் தூண் இல்லாமல் இருப்பது போலத் தொடர் வலுவே' ஒரு சொல் இல்லாமல் வாக்கியம் நிற்க உதவுகிறது போலும்.

# உளி என்னும் சொல்

— பேரறிஞர் அ.மா. பரிமணம்

மக்களின் பேச்சு வழக்கில் இடம் பெற்றுக் காலந்தோறும் வளர்ந்து வரும் எந்த மொழியின் கண்ணும் அதன் சொற்கள் பொருள் வளம் பெற்றுச் சிறந்து விளங்குவது இயல்பாகும். அத்தகு மொழியின் ஒரு சொல், அதன் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைச் செவ்வி நோக்கி உணர்ந்து கொள்ளுமாறு இரு வகை வழக்கிலும் இடம் பெறுவதை அம்மொழியை அறிந்தோர் எளிதில் உணர்வர். பல பொருள் தந்து, அதனால் இலக்கணத்தில் பெயர் வினை முதலிய பல பெயர்கள் கொண்டு விளங்கும் ஒரு சொல்லை இக்கால மொழியியலார் எவ்வாறு விளக்கினாலும், மரபிலக்கண நூலார் 'பல பொருள் ஒரு சொல்' என்று குறிப்பிடுவர்.

உயர்தனிச் செம்மொழி என்று சிறப்பித்துரைக்கும் நலஞ் சான்ற தமிழ்மொழி பலபொருள் ஒரு சொல், ஒரு பொருட்பன் மொழி போன்றவற்றைப் பெற்றிருப்பதோடு, சொல் பொருளுணர்த்தும் முறைமையில் பல நுணுக்கங்களையும் பெற்றுத் திகழ்கின்றது. பாரதியார் தம் பாப்பாப் பாட்டில், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று குழந்தைகட்கு அறிவிக்கும் பாங்கில் கூறியிருப்பது, வெறும் தாய்மொழிப் பற்றால் எழுந்த புகழ்ச்சி மொழியாகாது; பிறமொழிகள் மீதுகொள்ளும் காழ்ப்பில் தோன்றக் கூடிய உணர்ச்சிப் புலப்பாடும் ஆகாது. பொருள் வளமும், உணர்த்தும் திறனும் மிக்கிலங்கும் தமிழ்மொழிச் சொற்களின் இயல்பு மொழிந்ததாகும். தண்டமிழ், ஒண்டமிழ் முதலாகத் தமிழுக்குக் கூறப்பட்டுள்ள அடைமொழிகளும் இவ்வகையில் அமைந்தனவாகும்.

## உளி என்னும் சொல்

உளி என்னுஞ் சொல், சங்க இலக்கியச் செய்யுட்கள் சிலவற்றில் ஆளப்பெற்றுள்ளது. அங்கு, ஈரெழுத்து ஒருமொழியாகிய இச்சொல், பெயராகவும் இடைச்சொல்லாகவும் இடம்பெற்றுள்ளது. 'நினைத்து' எனப் பொருள்படும் 'உள்ளி' என்னும்

வினையெச்சத்தின் திரிந்த வடிவமாகிய (தொகுத்தல் விகாரம்) 'உளி' என்பது, பாட்டும் தொகையுமாகிய சங்க நூலுள் இடம் பெறவில்லை. அது மணிமேகலையில்,

''ஈங்கு வந்தீர் யாரெனன் றெழுந்தவன்
பாங்குளி மாதவன் பணிதலும்'' (மணி-10=59,60)

என்னும் பகுதியில் அமைந்துள்ளது.

உளி என்னும் சொல்லின், சங்க நூல் ஆட்சி பற்றிச் சிந்திக்குமுன், அச்சொற்குச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி (Lexicon) கூறும் உரையினை அறிவது நலமாகும். அவ்வகராதி முதல் பொருள் வரிசையாக 1) தச்சுக்கருவிகளுள் ஒன்று (கூருளி குயின்ற ஈரிலை (நெடு. 119), (2) கணிச்சி (திவா), 3) சித்திரிக்கும் கருவி, 4) நகஞ்சீவி என்னும் பொருட்களையும். இரண்டாம் பொருள் வரிசையாக 1) இடம், 2) ஓர் ஏழனுருபு (திருமுரு.95) என்னும் பொருட்களையும், மூன்றாம் பொருள் வரிசையாக 1) மூன்றாம் வேற்றுமைப் பொருள்படும் இடைச்சொல் (குறள். 545 பரி உரை). 2) ஒரு பகுதிப் பொருள் விகுதி (மலைபடு. 153. உரை) என்னும் பொருட்களையும் கொடுத்துள்ளது. இந்த அகராதிக்கு முற்பட்ட காலத்தினதாக அமைந்த வி. விசுவநாதபிள்ளையால் தொகுக்கப்பட்ட 'தமிழ்-ஆங்கில அகராதி'யில் இச்சொற்கு, 1) எழனுருபு,

2) ஓர் கருவி, 3) செதுக்குங் கருவி என்ற மூன்று பொருட்கள் கூறப்பட்டுள்ளன, இவ்வகராதி, சிறப்பான தமிழ்ச் சொற்களுக்கு மட்டும் (comprising chiefly, high Tamil words) பொருள் கூறியுள்ளது. அதனால், பகுதிப் பொருள்விகுதி, முதலாக இலக்கண வகையான் அமைந்த பொருள் வேறுபாடுகள் காட்டப் படவில்லை போலும்!

உளி என்னும் சொல்

இச்சொல், தச்சன் மரம் போன்றவற்றைச் செதுக்குவதற்கோ தோண்டுவதற்கோ பயன்படுத்தும் கருவி (Chisel) என்னும் பொருளில், பெயர்ச்சொல்லாக, 'அறைவாய்க் குறுந்துணி அயிலுளி பொருத, கைபுனைசெப்பம் கடைந்த மார்பின்' (சிறு.53,54) என்றும், 'கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்டு, ஆரம்' (சிறு:252) என்றும், 'வல்லோன் கூருளி குயின்ற' (நெடு. 119) என்றும் 'உளி வாய்ச் சுரையின் மிளிர மிண்டி' (பெரு.92)

என்றும் வந்துள்ளது. முன்னைய மூன்றிடங்களில் கூர்மை யுணர்த்தும் சொல்லை முன்னடையாகக் கொண்டும், நான்கா மிடத்தில் அடையின்றியும் ஆளப்பட்டுள்ளது. மேலும், நற்றிணை யிற் காணும் 'கயிறு கடையாத்த கடுகடை எறி உளி' (நற்.388.3) என்னுமிடத்து இச்சொல் எறி என்னும் அடையால், கையி னின்றும் வீசிஎறிதற்குரிய ஈட்டியை உணர்த்துவது குறிப்பிடத் தக்கது. இதன் பொருளை ஆராய்ந்தால் கடலில் மீன் வேட்டை யாடுவோர் சுறா, திமிங்கலம் போன்றவற்றைத் தாக்குதற்குப் பயன்படுத்தும் இந்த 'எறிஉளி' அதன் மறுமுனையில், வலிதாய் முறுக்குண்ட புரிகள் பொருந்திய கயிற்றோடு பிணிக்கப்பட்டு விளங்குமென்பதும் வேட்டைப் பொருளை உளி தாக்கியவுடன், கயிற்றால் இழுக்கப்பட்டு உளியும், தாக்குண்ட பொருளும் வேட்டையாடுவோரிடம் வந்தெய்தும் என்பது புலனாகும். உளியென்னும் பெயர்ச் சொல்லடியாகத் தோன்றி, உளியினை உடையவர் எனப் பொருள்படும் 'உளியர்' என்னும் சொல்லும், 'நிலனகழ் உளியர்' (மது. 641) எனப் பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ளது. கல், மரம் முதலியவற்றை அறுக்கவும், நிலத்தை அகழவும் உளி பயன்படுமென்பதனை, நச்சினார்க்கினியர் கல்லும், மரனும் துணிக்கும் நிலன் அகழ் உளியர்' என்று கொண்டு சுட்டிச் செய்து பொருளுரைத்துக் காட்டியுள்ளார்.

## உளி என்னும் இடைச்சொல்

பெயர்ச்சொல்லாகவோ, விகாரமுற்ற வினையெச்சச் சொல்லாகவோ அன்றி, இடைச்சொல்லாகவும் உளி என்னும் சொல் சங்க நூல்களில் ஆளப்பெற்றுள்ளது. தனக்கென வேறு பொருள் கொள்ளாமல் தான் சேர்ந்த பகுதியின் பொருளே தன் பொருளாகக் கொண்டு அமையும் சொல்லை விளக்குமிடத்து உரையாசிரியர் பகுதிப் 'பொருள் விகுதி' என்று குறிப்பிடுவர். 'இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' (பெரு.462). என்னும் பெரும்பாணாற்றுப்படை அடிக்குத்' தனக்குக் கூறுகின்ற இலக்கணங்களைத் தன்னிடத்தேயுடைய பெரிய யாழை வாசிக்கு முறைமையிலே வாசித்து' என்று பொருள் உரைத்த நச்சினார்க் கினியர், 'முறையுளி; உளி; பகுதிப் பொருள் விகுதி' என்று குறிப்புரைத்துள்ளார். இவ்வாறே, 'சிறுகட் பன்றிப் பழுதுணி போக்கி, (மலை.153) என்னும் மலைபடு கடாஅத்து அடிக்குச் 'சிறிய கண்ணையுடைய பன்றியிற் பழுதானவற்றைப் போக்கி'

எனப் பொருளும், 'உளி-பகுதிப் பொருள் விகுதி' என இலக்கணக் குறிப்பும் தந்துள்ளார்.

வேற்றுமைப் பொருட்களில் உளி

'முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ' (கலி 101-14) என்னும் முல்லைக்கலி அடியினை விளக்கும் நச்சினார்க்கினியர், 'செய்ய வேண்டிய முறைமைகளைப் பரவித் தொழுவிலே பாய்ந்தார்' என்று பொருள் கூறியுள்ளார். முறைமைகளை என்று கூறப்பட்ட பொருள் நோக்கிப் பதிப்பாசிரியர் இ. வை. அனந்தராமையர் தம் அரும்பத அகராதியில் இங்கு உளி இரண்டாம் வேற்றுமையில் வந்துள்ளது என்பதாகக் குறிப்பிட்டுள்ளார். 'செய்யும் முறைமைகளால்' என்று இங்கு மூன்றாம் உருபின் பொருளில் இச்சொல்லைப் பொருள் கொள்ளலாமாயினும், இந்நூலின் பிறிதோரிடத்தில் இச்சொற்கு மூன்றாம் வேற்றுமைப் பொருள்பட விளக்கியுள்ள நச்சினார்க்கினியரே இரண்டன் பொருள்பட விரித்தன்மையால் இச்சொல் இரண்டாம் வேற்றுமைப் பொருளிலும் விரிக்கத்தக்கது என்பதும், இவ்விடத்து அப்பொருளில் விரிப்பதே உகந்தது எனக் கொண்டு உரையாசிரியர் விரித்துரைத்துள்ளார் என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கனவாகும்.

முருகப் பெருமானுடைய மூவிருமுகங்களும் தனித்தனியே செயற்படுமாற்றை விளக்கும் நக்கீரர்.

'மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓக்கும்மே, ஒருமுகம், (திருமு.95,96)

எனக் கூறிய பகுதிக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர், 'ஒரு முகம் மந்திரத்தையுடைய வேதத்திற் கூறிய முறைமையிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்கு வராதபடி நினையா நிற்கும் 'என்று கூறியுள்ளார். அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே சாமிநாதையர் மரபுளி; உளி, மூன்றாவதன் பொருள்படுதோர் இடைச்சொல்' என்று சுட்டியுள்ளார். ஆனால், தமிழ்ப்பேரகாதி (Lexicon) உளி என்பதனுக்கு 'ஓர் ஏழனுருபு' எனப் பொருள் கூறி, 'அதற்குத் திருமுருகாற்றுப்படையின் இந்த அடியினையே எடுத்துக் காட்டாகக் குறிப்பிட்டுள்ளது. 'வேதத்திற்கூறிய முறைமையிடத்துத்தப்பாத என்னும் நச்சினார்க்கினியர் உரைப் பகுதியிலமைந்த இடம் என்னும் சொற்கொண்டு, ஏழனுருபு என்னும் பொருளை அவ்வகராதி குறிப்பிட்டிருக்கக்

கூடும். இக்கருத்துக்களுக்கெல்லாம் வேறாக நச்சினார்க்கினியர் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது.

இடைச்சொற்களின் பாகுபாடுணர்த்தும், 'அவைதாம், புணரியல் நிலையிடைப்பொருள் நிலைக்கு தநவும்' (தொல். சொல் 252, நச்சர்) எனத் தொடங்கும் நூற்பா உரையில், 'மந்திர விதியின் அந்தணர்' என ஐந்தாவது விரிதலானும், 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன்' (குறள்.545) என்புழி, முறைமையிலே செங்கோல் நடத்தும்' என ஏழன் உருபு, விரிதலானும், உளி என்பது மூன்றன் உருபின் பொருள்பட வந்தது அன்று; பகுதிப் பொருள் விகுதியாய் நின்று தனக்கு ஏற்ற உருபை ஏற்று நின்றது' என்று கூறியுள்ளார். இதனால் திருமுருகாற்றுப்படையில் உரையில் இவர் இத்தொடருக்குக் கூறியுள்ள, 'முறைமையிடத்துத் தப்பாதே' என்னும் உரையினையும் ஐந்தன் உருபின் பொருள்பட அமைந்ததாகவே கொள்ள வேண்டும். ஆனால், பரிமேலழகர் 'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன்' என்னுமிடத்தில் (குறள்.545) 'நூல்கள் சொல்லிய இயல்பாற் செங்கோலைச் செலுத்தும் அரசன்' என்று பொருள் கூறி, 'உளி என்பது மூன்றாவதன் பொருள்படுவதோர் இடைச் சொல்' என்று இலக்கணக் குறிப்பும் வரைந்துள்ளார்.

இக்கருத்துக்களை நோக்குங்கால், உளி என்னும் இடைச் சொல் பகுதிப் பொருள் விகுதியாக அன்றி வேற்றுமைப் பொருள் பட அமையுங்கால், தாம் ஆளப் பெறும் இடத்திற்குத் தக, இரண்டு, மூன்று, ஐந்து, ஏழு ஆகிய வேற்றுமைகளுள் ஒன்றன் பொருள்பட்டு நிற்குப் என்பதனை உய்த்துணரலாம். அதனால் குறிப்பிட்ட ஒரு தொடரில் அமைந்த அச்சொல், பொருள் கொள்ளப்பட்ட பாங்கிற்கேற்ப, வேறுபட்ட வேற்றுமைப் பொருளாக விரித்துக்காட்டப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் தம் சொல்லதிகார வேற்றுமையியற்கண், வேற்றுமை உருபுகளையும், அவை உணர்த்தும் பொருட்களையும் முறைப்படுத்திக் கூறியுள்ளார். அவர் சில உருபுகளை உரிய நூற்பாவிற் கூறாதுவிடினும், உடம்பொடு புணர்த்துக் கூறும் வகையால் ஏற்றுக் கொண்டுள்ளார். மூன்றாம் வேற்றுமைக்கு ஒடு உருபு ஒன்றையே நூற்பாவில் (தொல், சொல்.74) கூறியிருப்பினும் 'அதனின் இயறல்' (தொல். சொல்.75) என்னும் நூற்பாவில் ஆன் உருபினை மூன்றன் பொருளில் ஆண்டிருப்பதாக

உரையாசிரியர் (தொல். சொல்.74 நச்சர். விளக்கம்) விளக்கியுள்ளமையால் அதனையும் மூன்றன் உருபாக உடன்பட்டாராகக் கொள்ளல் வேண்டும். ஆன், ஆல் எனத்திரிந்து நிற்குமாதலின் (நச்சர். மேற்கூறிய விளக்கம்) அதனையும் கொள்ளுதல் வேண்டும் என்பது போதருகின்றது. 'ஏழாம் வேற்றுமை உருபு கண் என்பதனை, 'ஏழாகுவதே, கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி' (தொல்.சொல்.82) எனக்கூறி, அடுத்த நூற்பாவில் 'கண் கால் புறம் அகம்' எனத்தொடங்கிக் கண்ணோடு பிற 18 சொற்களையும் கூறியுள்ளார். அங்ஙனம் கூறப்பட்ட சொற்களை ஏழாம் வேற்றுமை உருபுகளாகக் கொள்வோரும், அவற்றை உருபின் பொருளில் வந்த சொற்களாகக் கொள்வோரும் என உரையாசிரியர்கள் இருவகைப் படுகின்றனர். இஃதெங்ஙனமாயினும், 2,3,4,5,7, ஆகிய வேற்றுமைப் பொருள்களாக விரித்துப் பொருள் கொள்ளும் வகையில் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ள உளி என்னும் சொல்லைத் தொல்காப்பியர் வேற்றுமை உருபாகவோ, வேற்றுமை உருபின் பொருள்பட வரும் சொல்லாகவோ குறிப்பிட வில்லை. சங்க நூல்களுக்கு முற்பட்டது தொல்காப்பியமாகும் என்று இதற்கு ஒருவகையில் அமைதி கூறலாம். ஆனால், பிற் காலத்தில் தோன்றிய நன்னூலும் அதனைப் போலச் சொல் லிலணக்கணம் கூறும் பிற நூல்களும் உளி என்பதனைக் கூறாமல் விடுத்துள்ளமையை நோக்குதல் வேண்டும்.

மூன்றாம் வேற்றுமை உருபுகளைக் கூறுங்கால் தொல் காப்பியங் கூறிய ஒடு உருபோடு அந்நூல் உடம்பொடுபுணர்த்துக் கொண்டதாகக் கூறப்படும் ஆன், உருபையும் அதன் வழி யமைந்த ஆல் உருபையும் சேர்த்து. 'மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு' (நனி.297) என்று நூற்பா வியற்றிய பவணந்தி முனிவர், சங்க நூல்களிலும் பிற்கால நூல்களிலும் வேற்றுமை உருபின் பொருள்பட வந்துள்ள உளி என்னும் சொல்லைக் கூறாதே விடுத்துள்ளார். இச்சொல் ஒரு வேற்றுமைப் பொருளை மட்டும் உணர்த்துவதாக அமையாமல் பலவேற்றுமைப்பொருளில் விரித்துரைக்குமாறு அமைந்துள்ளமையால் இலக்கண ஆசிரியர் கள், வேற்றுமைப் பொருளில் வழங்கும் உளி என்னும் சொல்லை அறிந்திருந்தனராயினும், தம் நூல்களுள் வேற்றுமை உருபு கூறுங் கால், இதனை இணைக்காது விடுத்துள்ளனர். உளி என்னும் இடைச்சொல் அமைந்த ஒரு தொடர், பொருள் கொள்ளுவார் கருத்திற்கேற்பப் பிற வேற்றுமைப் பொருள் கொள்ளுமாறும்

அமைந்து விடுவதால் எந்த வேற்றுமை உருபோடும் இணைத்துக் கூறும் வாய்ப்பினை இச்சொல் இழந்ததாகின்றது. உறுதி வாய்ந்த பொருள் நிலை இன்றிக் கொள்வார் கொள்ளும் வகை பொருள்கோடற்கமைதலின், இச்சொல் உருவாக எண்ணப் படாதது தக்கதேயாகும். இவ்வாறமைந்து, தான் அமைந்துள்ள இடத்திற்கும் தம்மைக் கற்பார் அறிவுத்திறனுக்கும் ஏற்றவாறு பொருள் தந்து நிற்கும் இச்சொல், குறிபிட்ட வரையறைக்குள் அடங்காது போயினும், வளமும் நலமும் வாய்ந்த ஒரு சிறந்த சொல்லாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

வேற்றுமை உருபாக வந்த உளி என்னும் சொல் பல பொருளில் இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களால் விளக்கப் பட்டுள்ள தன்மையினை அறிந்த சிவஞான முனிவர் சிவஞான போதச் சிற்றுரையில் தம் கருத்திற்கேற்ப விளக்கி, அதற்குச் சான்றும் கூறியுள்ளார். இங்குளி எனத்தொடங்கும் சிவஞான போத எடுத்துக்காட்டு வெண்பாவில், ‘இங்குளி வாங்கும்’ என்னும் தொடருக்குப் ‘பெருங்காயத்தினின்றும் வாங்கிக் கொள்ளும்’ எனப் பொருள் உரைத்து, ‘உளி ஐந்தாம் வேற்றுமை உருபுபட நின்றது; ‘மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி’ என்றாற்போல் (திருமு.95) என்று இலக்கணக்குறிப்பும், அதற்கான பிறிதோர் இலக்கிய மேற்கோளும் காட்டியுள்ளார். இதனால், அவர் திருமுருகாற்றுப் படையில் இடம்பெறும் உளி என்னும் சொல்லுக்குப் பிறர் கூறிய இலக்கண விளக்கங்களை ஏலாது தம் கருத்துப் புலப்படும்படி காட்டியிருப்பது மனங் கொளற்குரியதாகும்.

பிற்காலத்தில் எழுந்த சேந்தன் திவாகரம் போன்றவற்றில் உளி என்பதற்குக் கணி என பிற பொருளும் தரப்பட்டுள்ளது. திருமந்திரத்தில் இச்சொல் மனம் என்னும் பொருளில்,

வெளியை அறிற்து வெளியின் நடுவே
ஒளியை அறியின் உளிமுறியாமே
தெளிவை அறிந்து செழுநந்தியாலே
வெளியை அறிந்தனன் மேலறியேனே

(திருமந்திரம். 839)

என்று ஆளப்பட்டுள்ளது கொம்பு என்னும் பொருளிலும் இச் சொல் பிற்கால ஆசிரியர்களால் ஆளப்பெற்றுள்ளது.

# பொம்மல் ஓதியார்

— வை. தங்கமணி

எட்டுத் தொகை நூற்களுள் 'குறுந்தொகை' நூலின் ஒரு பாடல் :

''உதுக்காண் அதுவே இதுவென் மொழிகோ
நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையின் பிரிந்தோர் உள்ளா
தீங்குரல் அகவக் கேட்டு நீங்கிய
ஏதி லாளர் இவண்வரின் போதின்
பொம்மல் ஓதியும் புனையல்
எம்மும் தொடாஅல் என்குவெம் மன்னே''

(பாடல் எண் : 193)

கூற்று : தலைவி கூற்று

துறை ; பிரிவுழிப் பொறுத்திட மாட்டாள் என வருந்திய தோழிக்குத் 'தலைவி 'யான் பொறுத்துக் கொள்வேன்' எனக் கூறியது.

இதன்கண் தலைவி தோழியை நோக்கி 'தம் தலைவர் இங்குத் துணையொடு வாழும் பறவைகள் தம்மில் மகிழ்ந்து இனிய குரலால் அகவி நிற்பதைக் கேட்டிருந்தும்; நாம் பிரியின் இவள் நிலை என்னவாகும். என்று கருதாது பிரிந்தனர் அல்லரோ? அவர் வருவார். வந்தால் பொம்மல் ஓதியும் தொடாதே, என்னைத் தொடுவதையும் விட்டுவிடு என்று புலந்து மறுப்போம்' என்று கூறுகிறாள்.

பாடிய புலவர் யார்? என்று அறிய முடியவில்லை. பெயர் கண்டறிய முனைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தோழி, தலைவரின் இச்செயலை என்ன தன்மை வாய்ந்தது என்று கூறுவேன். வலிமை உடைய கிளையின்கண் வாழ்ந்து கொண்டிருந்த பெரிய கூட்டத்தை உடைய பறவை இனங்கள் தாம் துணைகளோடு கூடி இருப்பதாலே துணை பிரிந்தார் நிலை என்ன என்பதை எண்ணாது இனிய குரலாலே அழைப்

பதைத் தாமே கேட்டபின்னரும், எம் நிலையைக் கருதாது பிரிந்து சென்ற ஏதிலார் இவ்விடத்திற்கு மீண்டும் வந்தால், பூவாலே எம்முடைய பொங்குதலை உடைய கூந்தலைத் தொடாது நீங்குக, எம்மையும் தொடாதீர், எனயாம் கூறி நிற்போம், அப்புலவி நிலையே இது என்பதை நீ காண்பாயாக' என்றாள்.

'தலைவன் பிரிந்தமை எண்ணி வருந்தவில்லை - அவன் செய்தமையையே எண்ணியெண்ணி வருந்துகின்றேன்' என்ற வாறுமாம்.

நான் ஆற்றா நிலை எய்திவிட்டதாகத் தோழி கருது கின்றனள். ஆகையால் இது நீ கருதும் ஆற்றா நிலை அன்று, ஊடல் நிலை - புலவி நிலை. அதனால்தான் 'உது' என்பாள்.

உது என்றது எதனை? என அறிய விரும்பிய தோழியை நோக்கி, இது 'என் மொழிகோ' அதனை என்னவென்று கூறு வேன் - என்னை விட்டு நீங்கிய ஏதிலாண்மை உடையோர்வரின் 'பொம்மலோதி'யைத் தொடாதே என்னையும் தொடாதே என்றாள்.

கூடிய காலத்துச் செய்த புன் தொழிலை எண்ணினாள்; ஆதலால்தான் 'என் மொழிகோ' என்றாள்.

செய்வதையும் செய்துவிட்டு, பிரிந்து சென்றமையால் சினத்தின் எல்லைக்கே தலைவி சென்றுவிட்டமையால் 'ஏதிலாளர்' என்றான்.

பறவைகள் துணையொடு வாழ்தலின் - அவை இனிய குரலில் அகவுவது துணை பிரிந்தவர்களை வருத்தும் என்று எண்ணாது 'அகவுகிறது'. ஆனால் அறிவுமிக்க நம்தலைவர் தாம் பிரிந்த பின்னரும் இப்பறவை இனங்கள் அகவுமாயின் தலைவி யின் நிலை என்னவாகும் என்றெண்ணாது பிரிந்து சென்றதால் (நினையாது அகவுகின்றன) 'உள்ளா அகவும்' எனப் பறவை களின் மேல் ஏற்றிக் கூறுகிறார்.

தலைவன் பிரியுங்காலத்து கருங்குழலுடன் நுதலும் தடவி தலையளி செய்து பிரிவன் என்று முன் (190) செய்யுளில்:

'நெறியிருங் கதுப்பொடு பெருந்தோள் நீவி' என்பதால் இச்செய்யுளிலும் 'பொம்மல் ஓதி' நீவி-உடலும் தழுவி பிரிந்தவர் வரட்டும் வந்தால் சூழலும் உடலும் தொடாதீர் என்பது தோன்ற

'பொம்மல் ஓதியும் புனையல், எம்மும் தொடாஅல்' என்ற தொடரால் அமைந்து கிடத்தலைக் காணலாம்.

உடலுக்கு முந்தி ஓதி நிற்கிறது. ஓதி பொம்மலோதி ஆகிறது. சிறப்பு அதிகம். ஓதி சுற்றி ஒளிமுகத்தைப் பார்ப்பாரும் உண்டு.

கூந்தலை ஐந்து வகையாக முடிக்கப்படும் என்பர், அவை:

1. மயிரை உச்சியில் முடித்தலாகிய முடியும்.
2. சுருட்டி முடித்தலாகிய குழலும்,
3. மயிரை முடித்து விடுதலாகிய கொண்டை என்னும் தொங்கலும்,
4. பின்னி விடுதலாகிய பனிச்சையும்.
5. பின்னே செருகுதலாகிய சுருளும் - என்று ஐவகை என்பர்.

கூந்தல் குலைதல் கூடாது-குலைந்தால்-குலைந்தவர்க்குத் துன்பத்தை உண்டாக்கும் என்பதைச் சூதுப்போர் சருக்கம், 221-ஆம் பாடலில் 'தாமம் நாறும் குழலோ உரவுக் கொடி வேந்தன் குலமோ குலைந்தது' - பாஞ்சாலியின் குழல் அல்ல குலைந்தது-பாம்புக் கொடியோனுடைய (திரியோதனன்) குலமே குலைந்தது - என்பார். இதைத் தொடர்ந்து பாஞ்சாலி.

'அரசபையில் எனையேற்றி அஞ்சாமல் துகில் தீண்டி
அளகம் தீண்டி
விரைசெய் அளியினம் படிதார் வேந்தரெதிர்
தகாதனவே விளம்புவோரைப்
பெருஞ்சமரில் முடிதுணித்துப் புலால் நாறும்
வெங்குருதி பொழிய வெற்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்தகுழல்
இனியெடுத்து முடியேன்' என்றாள்-
(சூதுபோர் சருக்கம் - 255)

இதிலிருந்து கூந்தலுக்குரிய சிறப்பு நன்குணரலாம்.

பாரதியாரும், பாஞ்சாலியின் கூந்தலுக்குச் சிறப்புத் தரும் முகத்தான் 'துச்சாதனன் செந்நீர், திரியோதனன் ரத்தம்-இரண்டையும் கலந்து சீவிக்குழல் முடிப்பேன் - இது, செய்யுமுன்னே முடியேன்' என்று கூறுவார்.

சிலம்பில் புறஞ்சேரி இறுத்த காதையில் கௌசிகன் கொடுத்த முடங்கலைப் பெற்றுக் கொண்ட கோவலன் 'உடனுறை காலத்து உறைத்த நெய்வாசம் குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்தி'-இந்த மண்ணுடை முடங்கல் வாங்கியதும், உடனுறைந்த காலத்து உள்ள கூந்தலை நினைவுக்குக் கொண்டு வந்தது என்றால், கூந்தலுக்கும் உயர்வை அறியலாம் அல்லவா? தொடர்ந்து வழக்குரை காதையில்:

காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்' - என்றால் கூந்தல் செய்யும் செயலினை

என்னவென்று இயம்புவது.

யாப்பருங்கலக் காரிகையில் அமிதசாகரர் அதன்சிறப்புப் பாயிரத்தில் 'பல்லவத்தின் சந்தம் மடிய அடியான் மருட்டிய தாழ் குழல்' என்பதில் இருந்து குழலுக்குத் தரும் ஏற்றம் நன் கறியலாம்.

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இறைவனே கூந்தலுக்குச் சிறப்புத்தர எண்ணி,

'கொங்குதேர் வாழ்க்கைஅஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

(குறுந்தொகை.2)

இதில் வண்டை அழைத்து, இவளது கூந்தல் போன்று நறுமணம் மிக்க மலர்களும் உள்ளனவா? என வினவுவது இதில் கூந்தலுக்குச் சிறப்புத் தரும் பொருட்டுப் பாடியது. இப்பாடல் சிவபெருமான் நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறித் தருமிக்காய் நக்கீரனோடு வாதிட்ட வரலாறும் அறியத்தக்கது.

தொடர்ந்தாற்போல் குறுந்தொகையிலேயே 379ஆம் பாடலையும் இங்குக் கருதவேண்டும்.
பாடல் இதோ :

'இன்றியான் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு

கண்ணகன் தூமணி பெறூஉம் நாடன்
அறிவுகாழ்க் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்மில் வருகுவை நீயெனப்
பொம்மல் ஓதி நீவி யோனே.

இப்பாடலுக்கும் பாடியவர் பெயர் இல்லை. துறை : நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று : தோழி கூற்று.

கிழங்கு எடுக்கும் போது தூய மணியையும் பெறுவதற்குரிய வளமுடைய நாட்டை உடையவன். நினது அறிவு காழ்க் கொள்ளும் பொழுது நங்காய், எம்மில்லிற்கு வரக்கடவாய் என்று எழுச்சி கொள்ளும் கூந்தலை நீவிச் சென்றவன் இன்று எவ் விடத்துளானோ? அறியேன். என்பது பொருள். இப்பாடலிலும் 'பொம்மலோதி' என்ற தொடரே சிறப்புக்குரிய தொடராக அமைவதால் 191ஆம் பாடலுக்கும் -379ஆம் பாடலுக்றிம் ''பொம்மலோதியார்'' என்ற பாடலில் வந்த தொடரையே பாடலைப் பாடியோருக்குச் சூட்டலாம் அல்லவா?.

# தமிழ் வழக்கு

திரு. நாராயணையங்கார்

தமிழ் வழக்கு என்பது இங்குத் தமிழாகிய வழக்கு என விரியும். வழக்கு எனினும் ஒக்கும். அது ஒருவன் கருதிய பொருளை அறிவுறுக்கும் சொற்றொடர்களின் நிகழ்ச்சியாம். சொற்பொருளொற்றுமை நயத்தால், பொருட்டொடர் நிகழ்ச்சியும் வழக்கெனப்படும். தமிழாகிய சொற்றொடர்களின் நிகழ்ச்சியை (தமிழ்ப்பாஷையை) ஆராய்தலால் இதற்குத் தமிழ் வழக்கு எனப் பெயர் கொடுக்கப்பட்டது.

தமிழ் வழக்கு உலக வழக்கு, செய்யுள் வழக்கு என இரு வகைப்படும். உலக வழக்கு லௌகிகபாஷை. செய்யுள் வழக்கு காவ்யபாஷை.

உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் அவ்விரு வகை வழக்கையும் ❋முதற்பொருளாகவும், அவ்விரு வகை வழக்கிற்கும் உறுப்பாயுள்ள எழுத்து, சொல் பொருள் என்னும் இவற்றை அம்முதற்பொருள்களின் சினைப்பொருள்களாகவும் கொண்டு இலக்கணங்கள் வரையப்பட்டுள்ளன.

இக்கருத்து தொல்காப்பியப் பாயிரத்துள், ''வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' என்று பனம்பாரானாரால் வெளியிடப்பட்டது.

இதன்பொருள்: 'உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் அவ்விரண்டு முதற்பொருள்களுக்குமுரிய சினைப்பொருள்களாகிய எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றின் இலக்கணங்களைச் சொல்ல விரும்பி' என்பதாம்.

இதனுள், உலகவழக்கை வழக்கு என்றும் செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் நாமைகதேசக்கிரகணம் என்னும் நியாயத்தாற் சுருக்கிச் சொல்லலாயிற்று.

---

❋ முதற்பொருளாவது: பலசினை (கிளை) களடங்கிய பிண்டமாம். அது பல உறுப்புகளடங்கிய உடல்போல்வது.

❋ உறுப்பு எனினும் சினை எனினும் அங்கம் எனினும் ஒக்கும்.

"ஆயிருமுதல்" என அகரச்சுட்டு நீண்டுநின்றது; அவ்விரு முதல் என்றபடி. வழக்கும் செய்யுளுமாயுள்ள அவ்விரண்டினை யும் 'முதல்' என்றமையால், அவற்றின் உறுப்பாயுள்ள எழுத்தும் சொல்லும் பொருளும் அம் முதற்பொருளின் இயைபிறிதாகிய சினை எனப் பொருள் கொள்ளக்கிடக்கின்றன.❊

சொற்றொடர் நிகழ்ச்சியால் ஒலிவடிவான பாஷைக்கு எழுத்தும் சொல்லும் ஒலிவடிவால் ஒற்றுமையுடைமையால் அவை அகத்துறுப்பாகிய சினையாம்; அவை ஒருவனுக்குக், கை கால் விரல் உகிர் முதலியனபோல அங்கமாகவும் உபாங்கமாகவும் ஏற்ற பெற்றி கொள்ளக்கிடக்கும்.

பொருள் ஒன்றுமட்டும் ஒலிவடிவான சொற்றொடரின் வேறாயிருத்தலாற் புறத்துறுப்பாகிய சினையாம்; அது ஒரு வனுக்கு ஆடை அணிகலன்கள் போல்வது.

இவ்வாறு ஒருபொருளுக்கு இருவகையுறுப்புக்கள் உண்டு என்பதை, 'புறத்துறுப்பெல்லாம் எவன் செய்யும் யாக்கை-யகத் துறுப் பன்பிலவர்க்கு' என்பதனாலும் அறியலாம்.

ஆகவே, பாஷையாகிய சொற்றொடர் நிகழ்ச்சிக்கு எழுத் தொலியும் அகத்துறுப்பாகிய சினையாகவும் அச்சொற்றொட ரொலிகளால் உணர்த்தப்படும் பொருள் புறத்துறுப்பாகிய சினை யாகவும் கொள்ளப்பட்டு அவற்றின் இலக்கணங்கள் தொல் காப்பினரால் ஆராய்ந்து உரைக்கப்பட்டன என்பதாம்.

உலகவழக்கிற்கும் செய்யுள்வழக்கிற்கும் உரிய எழுத்திலக் கணங்கள் எழுத்ததிகாரத்தாலும், அவற்றிற்குரிய சொல்லிலக் கணங்கள் சொல்லதிகாரத்தாலும் ஒருங்கு உரைக்கப்பட்டன.

---

❊ நாமைகதேசக்கிரகணமாவது: ஒருபொருளுக்குரிய முழுப் பெயரின் ஏகதேசமாகிய ஒருபகுதியைக் கொண்டு அப் பொருளை வழங்குவது. அதுநரசிங்கப்பிரானைச் சிங்கப் பிரான் எனவும், வீமசேனனை வீமன் எனவும் வழங்குதல் போல இங்கு உலக வழக்கை வழக்கு என்றும், செய்யுள் வழக்கைச் செய்யுள் என்றும் அப்பெயர்களின் நிலைமொழி வருமொழிகளுள் ஒன்று கொண்டு வழங்கியிருப்பது.

❊ இப்பாயிரப்பகுதிக்கு இவ்வாறு பொருள் கொள்ளாத பிற ரெல்லாம் வேறுவேறு பொருளுரைத்து இடர்ப்படுவர்.

ஆவற்றுள் உலகவழக்கிலக்கணங்களே பெரும்பான்மையாகவும் செய்யுள்வழக்கிலக்கணங்கள் சிறுபான்மையாகவும் உள்ளன.

உலகவழக்கிற்குரிய பொருள்களெல்லாம் கற்றுணர வேண்டாது உலகியலறிவாலே பட்டாங்குணர்த்தும் சொல்லுணர்ச்சி கொண்டே தெள்ளிதின் அறியக்கிடத்தலால் அவற்றை இலக்கணங்கூறியுணர்த்தாது விடுத்துச் செய்யுட்குரிய பொருளிலக்கணங்கள், நாடகவழக்கும் உலகியல்வழக்கும் விரவிய புலனெறி வழக்கிற்குரியவாய் நூலறிவானன்றி உலகியலறிவால் அறிதற்கரியனவாயிருத்தலால் அவையே பெரும்பாலும் பொருளதிகாரத்தாற் சொல்லப்பட்டன.

அவற்றுள், அகத்திணையியல் புறத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என்னும் இவற்றால் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இருவகைப்பொருள் பற்றி நிகழும் செய்யுள் வழக்கிற்குரிய பொருளிலக்கணங்கள் வரையறுக்கப் பட்டன. இவை செய்யுள் வழக்கிற்குப் புறவுறுப்பாகிய அங்கங்களாம்.

செய்யுளியலால் அப்பொருள் பற்றி நிகழும் செய்யுட்பகுதிகளெல்லாம் வரையறுக்கப்பட்டு அவற்றின் இலக்கணங்களும் உரைக்கப்பட்டன. இவை செய்யுள் வழக்கிற்கு அங்கமாகிய பொருளின் வாயிலாக உபாங்கங்களாம். இவ் அங்கோபாங்கங்கள் சினையின் பாற்பட்டன.

உவமவியல் மெய்ப்பாட்டியல்களிரண்டும் இருவகைவழக்கிற்கும் பொதுவாய் அப்பொருள் பற்றி நிகழும் தோற்றம், சுவை முதலிய காட்சிக்கும் கருத்துக்கும் இலக்காகும் அப்பொருள்களின் இயல்புகளைப் புலப்படுத்தலால் அவை அப்பொருள்களின் வாயிலாக இருவகை வழக்கிற்கும் உபாங்கமாகிய சினைப் பொருள்களாம்.

மரபியலால் அவ்விருவகை வழக்கினும் வழங்கற்குரிய பொருட்பெயர் முதலான பலவகை இலக்கணங்களும் அவ்வம் மரபுபற்றியுரைக்கப்பட்டமையால் அவை அப்பொருளின் புறத்துறுப்பாகி உபாங்கம் என்னும் சினைப்பொருளாயின.

இங்ஙனம் உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய தமிழ்ப் பாஷைக்குரிய எழுத்து சொல் பொருள் என்னும் சினைப்பொருள்

களைச் சாங்கோபாங்கமாக ஆராய்தலால் தொல்காப்பியம் வழக்குநூல் என்னும் பாஷாசாஸ்திரமாயிற்று.

இதனுட் சொல்லப்படும் களவு, கற்பு முதலிய பலவகை ஒழுக்கங்களும் பொருளின்பாற்படும்; அப்பொருள் பற்றி வரும் கூற்று, கிளவி, துறை எனப் பெயர்பெறும் சொற்றொடர் களெல்லாம் செய்யுள் வழக்காகிய காவ்யபாஷை யெனப்படும்.

இவ்வாற்றான் உலக வழக்கும் செய்யுள் வழக்கும் வகுத் துரைக்கும் தொல்காப்பியத்துக்கு வழக்குநூல் என்பது நுவல் பொருள் பற்றிய பெயராயிற்று.

இங்ஙனங்கொள்ளுதலால் தொல்காப்பியம், வழக்கு (பாஷை) என்னும் ஒரு பொருணுதலிவரும் மூன்றுறுப்படக்கிய பிண்டமாய் ஒருநூலாயிற்று.

இங்ஙனங் கூறியவாற்றல் தமிழ் வழக்கிற்குரிய பிரமாணம் தொல்காப்பியம் என்பதும், பாஷைக்கு வழக்கு என ஒரு பொதுப் பெயர் உண்டென்பதும் நிரூபிக்கலாயிற்று.

---

குறிப்பு: இக்கட்டுரை 1913 நவம்பர் – திசம்பர் இதழில் வெளி வந்தது (தொகுதி 12 பகுதி 1)

# தமிழ் நூல்

டாக்டர் பெ. சுயம்பு

## முன்னுரை

தமிழ் இலக்கண நூற்களின் வரிசையில் இக்காலத்தில் இயற்றி அச்சிடப்பட்டது தமிழ் நூலாகும். திருவாரூரைச் சார்ந்த த. சரவணத் தமிழன் என்பவர் இயற்றிய நூலிது. இந்நூல் 432 நூற்பாக்களும் உரையுமாக அமைந்தது. இரண்டையும் நூலா சிரியரே இயற்றியுள்ளார்.

நன்னூலுக்குச் சார்பு நூல் என்று இயற்றியவராலே குறிப்பிடப்படுகின்ற தமிழ்நூல் 1972 சூனில் அச்சிடப்பட்டது. ஞா. தேவநேயன், பெருஞ்சித்திரன், அடிகளாசிரியன், ச. பால சுந்தரம் ஆகியோரின் மதிப்புரை, பாயிரம் வாழ்த்துரை, புறவுரை என்பன நூற்குமுன் சேர்க்கப்பட்டுள்ளன. எழுத்தியல், சொல் லியல், உறுப்பியல், புணரியல், பொதுவியல், ஒழிபியல், தொட ரியல் எனும் ஏழு பகுப்பில் இலக்கணச் செய்திகள் கூறப் பட்டுள்ளன.

## எழுத்தியல்

எழுத்தியற் செய்திகள் ஒலியெழுத்து, சொல் முதலெழுத்து சொல்லிறுதி எழுத்து, சொல்லிடை எழுத்து, புறனடை, வரி-யெழுத்து என்ற முறையில் கூறப்படுகின்றன.

### எழுத்துவகை

எழுத்தின் வகை என்று உயிர், மெய், ஆய்தம், உயிர் மெய் எனும் நான்கையும் இந்நூல் (3) சுட்டுகிறது. இவற்றுள், 'உயிரும் மெய்யுமே அடிப்படை எழுத்துகள்' (4) என்கிறார் நூற்பா அமைத்த ஆசிரியர். ஆய்தமும் உயிர்மெய்யும் சார்பெழுதுக்கள் என உரையில் தெரிவிக்கின்றார். மேலும், தமிழ் எழுத்துக்கள் முப்பதே என்பது இந்நூலாசிரியர் கருத்தாகும். இம்முப்பதும் ஒலியன் என்ற தகுதிக்கு உரியன. நன்னூல் போல்வன சுட்டும் முதலெழுத்து எனற்குஇணையாக அடிப்படை எழுத்து என்பது இதில் ஆளப்படுகின்றது.

வல்லெழுத்திற்கும் மெல்லெழுத்திற்கு இடைப்பட்ட ஒலியியல்பை உடையது இடையெழுத்து என்பது முந்தைய இலக்கண உரைகாரர்களின் கருத்து. ஆனால் இந்நூலோ 6) வல்லினத்திற்கும் உயிர்க்கும் இடையொலி என்று வேறுபடுகின்றது. இது இந்நூலில் காணப்படும் புதுமைகளுள் ஒன்றாகும்.

அ,இ, எனும் சுட்டுக்களையும் ஆ,ஓ,எ,யா, எனும் வினாக்களையும் உணர்த்தும் வடிவங்களையும் இந்நூல் (7,8 எழுத்தியலில் குறிப்பிடுகின்றது. இவை தனியொரு எழுத்தளவில் அமையும் உருபன்களாகும். இவற்றைச் சொல்லியலில் கூறியிருந்தால் ஏற்புடையதாக அமையும். முந்தை மரபிலக்கண வழியையே இந்நூலும் தொடர்கின்றது. உகரச் சுட்டு வழக்கு இன்மையால் நீக்கப்பட்டுளது என்பது ஆசிரியர் கருத்து. இக்கருத்தில் இந்நூல் நன்னூல், இலக்கண விளக்கம் போன்ற முந்தை நூற்களினும் சிறந்து நிற்கிறது.

ஆய்தம் ககரம் போன்று ஒலிபெறும். அது ஏனம், ஆனம் ஆகிய சாரியைகளோடு சேர்ந்து ஒலிக்கப்பெறும். அவ்வமயம் ஆய்தத்திற்கு முன்னர் அகரமும் அ) பின்னர்க் ககரமும் (க்) சேர்ந்து அமையும். இது ஒரு நுணுக்க வொலி எழுத்து என்றெல்லாம் குறிப்பிடும் ஆசிரியர் (9,23),இக்கால வழக்கில் அக்கன்னா, அக்கேனா என்று நெடுங்கணக்கில் பயின்று வருதலையும் சுட்டுகின்றார். ஆய்தம் வல்லெழுத்துக்களோடு சேர்ந்து அவற்றை உரசு ஒலிகளாக (ஹ,ஸ போல்வன) மாற்றுவதையே ஆசிரியர் நுணுக்கவொலி என்று குறிப்பிடுகின்றார். தொல்காப்பியமும் (2:8:32) ஆய்தம் என்பதற்கு 'உள்ளதன் நுணுக்கம்' என்ற பொருளையே சுட்டுகின்றது. எனவே ஆய்தத்தை ஒலிமாற்றியாக இந்நூல் கருதுகின்றது எனலாம். மேலும், ஆய்தம் எழுத்தளவில் ஹகர வொலி பெற்றிருந்த போதிலும் சொல்லில் இடம் பெறும்போது சாரும் வல்லொலிக்கு ஏற்ப உரசொலியாக மாறும் தன்மையை அடைகிறது என்பதனையும் இவண் சுட்ட வேண்டும்.

ஆய்தம் குறிலைத் தொடர்ந்தும் வல்லின உயிர்மெய்யால் தொடரப்பட்டும் சொற்களில் அமையும் எனினும் முந்தை நூற்களின் கருத்து இந்நூலிலும் (9) கூறப்பட்டுளது. எனினும் பிற மொழிச் சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்குங்கால் சொல் முதலிலும் வருதல் உண்டு எனும் செய்தியும் ஒழிபியலில் (375)

காணப்படுகிறது. இக்கருத்து இக்காலத்தையோர் சிலர் ஃபிரெஞ்சு (French), ஃசீபுரா Zebra) என்று எழுதுதலை உட்கொண்டமைந்ததாகும்.

மெய்யெழுத்தை 'இ' சேர்த்து 'இ' (க்) என்று ஒலிக்கும் இக்கால நெறி ii) சுட்டிக்காட்டப்படுகின்றது. தவிர, நன்னூலில் கூறப்படும் எழுத்துச் சாரியைகளும் (22,23) கூறப்படுகின்றன.

பிறப்பு

பிறப்பின் பொது இலக்கணம் கூறுமிடத்து (14) மொழியியலின் தாக்கத்தைக் காணமுடிகின்றது. 'நுரையீரலின் உள்ளிருந்தெழும் காற்று தொண்டை மூக்கினில் பொருந்தி', 'ஒலிமடல் எனும் விளக்கம் அறிவியற் சார்புடையது. முந்தை நூற்கள் நுரையீரலுக்குப் பதில் நெஞ்சு என்ற சொல்லையும் ஒலிமடற்குப் பதில் கழுத்து என்பதையும் குறிப்பிடுகின்றன.

ஒலியொப்புமை உடைய ர்,ற்,ழ்,,ள்,ல்,ண்,ந்,ன் எனும் எழுத்துக்களின் பிறப்பு மட்டுமே இந்நூலில் (15-21) எடுத்துரைக்கப்படுகின்றது. தமிழைப் பயில்வார்க்கு ஒலியின் தன்மையினை அறிவிக்கும் நோக்கத்தால் ஆசிரியர் இவ்வாறு சிலவற்றை மட்டும் கூறுகின்றார். எனினும் விவரிக்கும் பாங்கு ஒலியின் இயல்பைத் தெளிவாக்கும் வகையில் இல்லை.

அண்ணம் தன்னை நாநுனி வருட
ரகரமும் ஒற்றிட றகரமும் பிறக்கும் (17)

இந்நூற்பாவிற்கு அண்ணப் பகுதியை நாவின் நுனி எழுத்து வருட ரகரமும் ஒற்றிட றகரமும் பிறக்கும் என்று ஆசிரியர் உரை எழுதுகின்றார். இங்கு அண்ணத்தின் பகுதி இடையா, நுனியா என்பது தெளிவாக இல்லை. மேலும் றகரம் வல்லொலியாக (பற்றுப்) ஒலிக்கும்போது ஒற்றுதற்கு உரியது. அதாவது நுனி அண்ணத்தின் மேடான கூம்பினை நாநுனி ஒற்றும். ஆனால் றகரம் ஆடொலியாக (கறி அறம்) வரும்போது சிறப்பு ரகரத்தை ஒத்து(ஆனால் நாநுனி சில அதிர்வுகளோடு) அமையும். ற எனும் வரிவடிவிற்குத் தமிழில் இருவகை ஒலி உள்ளதை ஆசிரியர் சுட்டியிருக்கவேண்டும். இவ்வாறே பிற எழுத்துக்களின் விளக்கமும் தெளிவின்றி உளது. ஆண்டும் அண்ணத்தின் பகுதி சுட்டிக் காட்டப்படவில்லை. நகரத்தை மொழியலார் பல்லொலி என்று

சுட்டுவர். முந்தை நூற்களும் இக்கால வழக்கும் அவ்வாறே உள்ளன. ஆனால் இந்நூல் (20),

அண்ணம் பல்லுக் கிடையில் நாநுனி
விரிந்து சேர நகரம் பிறக்கும்

என்று நகரத்தை நுனியண்ணவொலியாகக் கூறுகிறது. ஆசிரியரது ஒலிப்பு அத்தகையது போலும்!

சொல்லில் வருதல்

சொல் முதல் எழுத்துக்களைக் கூறும் பட்டியலில் ந்,ம்,க், த்,ப் எனும் ஐந்தும் பன்னிரு உயிர்களுடனும் வரும்; யகரமும் ஞகரமும் ஆவோடு மட்டும் வரும்; சகரம் ஐ,ஔ ஒழிந்த பத்து உயிர்களோடும் வரும்; வகரம் உ,ஊ,ஒ,ஓ என்பன அல்லா எட்டுயிர்களோடும் வரும் எனும் செய்தி காணப்படுகிறது (25). சை,சௌ முதலாகிய சொற்கள் வடமொழிக்குரியனவாக இருப்ப தயல் இந்நூல் அவற்றை நீக்கியுளது. யாமுதற் சொற்கள் மட்டுமே தமிழுக்குரியனவாக இருத்தலால், இங்கு ய்+ஆ மட்டும் கூறப் பட்டுளது. ஞாயிறு, ஞாலம் போன்ற சொற்களில் மட்டுமே ஞகரம் முதலில் இக்காலத்தில் வருவதால் ஞ்+ஆ மட்டும் கூறப் பட்டுளது. இங்குத் தமிழ் நூல் இக்கால மொழியல் பயின்று வரும் தனித் தமிழ்ச் சொற்களை மட்டும் கருத்திற் கொண்டு இலக் கணம் கூறுகின்றது. தனது முதனூலாகிய நன்னூலினின்றும் வேறுபட்ட அணுகுமுறையில் விவரிக்கும் போக்கினை இங்குக் காணமுடிகின்றது. ஆனால் நன்னூலோ மொழியில் வழங்கும் அனைத்துச் சொற்களையும் (வடசொல் உட்பட, கருத்திற் கொண்டு இலக்கணம் கூறுகின்றது. முழுமையான இலக்கணம் என்பது ஒரு மொழியில் வழங்கும் அனைத்துக் கூறுகளையும் உட்படுத்துவதாக இருத்தல் வேண்டும் என்பது அறிவியல் நோக்காகும்.

மொழி முதல் எழுத்துக்களைக் கூறும்போது மேற்கொண்ட அணுகுமுறை இறுதி எழுத்துக்களைக் கூறுமிடத்துக் காணப்பட வில்லை. எகரம் தவிர்ந்த பதினோருயிர்களும் ண்,ம்,ன்,ய்,ர், ல்,வ்,ழ்,ள் எனும் ஒன்பது மெய்களும் சொல்லீற்றில் வரும் என்று தமிழ் நூல் (26) கூறுகிறது. உயிர்களுள் குறில் ஐந்தும் அள பெடையிலும் ஔகாரம் க்,வ், வொடிணைந்தும் மட்டுமே இறுதியில் வரும் எனும் வரையறையும் நன்னூல் போன்று இந்

நூலிலும் காணப்படுகிறது. மேலும், முன்னூல்களில் கூறப்பெற்ற ந் ஞ்,ங் மூன்றும் சொல்வழக்கிறந்தமையின் விடப்பட்டன'' எனும் உரையும் இடம்பெற்றுளது. ஙகரம் சொல்லிறுதியில் வருதலைத் தொல்காப்பியம் உள்ளிட்ட எந்த முன்னூல்களிலும் கூறப்பட வில்லை. எனவே உரைச் செய்தி மறதியின் விளைவாகலாம். கௌ, வௌ என்பன இக்கால வழக்கில் பயிலாதன. நெடில் நீண்டொலிக்கும் அளபெடையில் குறில்கள் ஈறாக வரும் என் கிறது உரைச் செய்தி. [நெடில் அளபெடையானது முதலும் ஈறும் நெடிலாகவே அமையும் (ஆ.........ஈ ....... எனினும் நன்னூல் போன்ற நூற்கள் ஆ அ, ஈ இ என்று அளபெடை அடை யாளமாக அகரத்தைக் கருதுகின்றன. அவ்வாறே இந்நூலும் வழி மொழிகின்றது. இத்தவறான கருத்தே அளபெடைக்கு மூன்று மாத்திரையை வரையறுக்கத் தூண்டியுளது); குறிலளபெடை குறிலாக அமையும் (அ.........இ......... இதனை விளி, புலம்பல், இசையில் ஓர்ந்து கொள்ளலாம்]. மரபு வழி வந்த தவறுகளில் ஒன்றான இதனை இந்நூலிலும் காணலாம். எனினும் மெய்யீறு களைக் குறித்தமட்டில் இக்கால மொழி வழக்கைப் பேணுதல் எனும் சிறப்பு அமைந்துளது.

சொல்லிடையில் வரும் எழுத்துப் பற்றிய செய்தி நன்னூலை வழிமொழிவதாகும். இங்கு 'வம்முன் யா' எனும் கூற்றுச் சிறப்புடையது. யாகாரம் மட்டுமே யகர வரிசையில் மொழி முதலில் வரும் என்றதால் இவ்வாறு கூறகின்றது (28–35) மெய்ம்மயக்கம் தனிச் சொல்லிலும் தொடரிலும் (சொற்கட்கிடை கிடையிலும்) வருதற்குரியது என்பது ஆசிரியர் கருத்தாகும் (35).

மொழி முதல், இறுதி, இடை குறித்த புறனடைச் செய்தி களே புறனடை எனும் பகுதியில் (36) உள. இது முன்னூற் களின் செய்தியாகும்.

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களில் சில சீர்திருத்தங் களை வரியெழுத்து எனும் பகுதியில் (37-45) ஆசிரியர் பரிந்து ரைக்கின்றார்.

எழுத்துச் சீர்திருத்தம்

1. ஊ, ஔ எனும் எழுத்துக்களில் அமைந்துள்ள ள எனும் குறியீட்டை ெ (ஒற்றைக் கொம்பு) (கால்) ா என்று பிரித்து முறையே உொ, ஔா என எழுதுதல்.

2. ஞ, ஞ, ரு எனும் ஆகார உயிர்மெய் எழுத்துக்களை னா, ணா, றா எனவும் ஆ எனும் உயிரை அா எனவும் எழுதுதல்,

3. னொ, னோ, ணொ ணோ, றொ, றோ என்பவற்றை முறையே னொ, னோ, ணொ, ணோ, றொ, றோ என்று எழுதுதல்.

4. ஐகார உயிர்மெய்யின் குறியான 'ை' என்பது ெ என்ற ஒற்றைக் கொம்பு இரண்டிணைந்தாகும். னை, ணை, லை, ளை என்பவற்றை முறையே னை, ணை, லை, ளை என எழுதுதல்.

மேற்சுட்டப்பட்ட நான்கனுள் 2 (ஆகார உயிர் தவிர), 3, 4 எனும் மூன்றும் தமிழக அரசினால் ஏற்கெனவே திருத்தமாக ஏற்கப்பெற்றுள்ளன.

உயிர்களுள் நெடில்களான ஐ, ஔ என்பனவற்றைக் கூட்டெழுத்துக்கள் என்று கருதுதலும் அக்கருத்துக்கு முரணாக இவற்றையும் தனி உயிர்களாக ஏற்று, உயிர் பன்னிரண்டு என்று கூறுவதும் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழகத்தில் நிலவுகின்ற ஊசலாட்டமாகும். இவ்வூசலாட்டத்தினை இந்நூலும் பற்றாமலில்லை. தமிழ் எழுத்துக்கள் 247 (3) என்றும் எதிர் காலத்தில் ஐ, ஔ இரண்டும் தவிர்க்கப் பெற்றால், இவற்றால் அமையும் 36 வடிவங்கள் (உயிர்மெய்) தமிழில் குறையும் (41) என்றும் இந்நூல் கூறுகிறது.

தமிழ் உயிர்கள் பத்தனுள் (ஐ, ஔ தவிர) நெடில்கள் ஐந்தும் குறில்கள் ஐந்தின் ஒலி நீட்சிகளாகக் கருதப்படுகின்றன. இதனால் நெடிலுக்கான குறியீட்டை (ா) ஐந்திற்கும் பொதுவான தாகவும் குறில் எழுத்துக்கள் ஐந்தாகவும் கொண்டு, ஆறு வரி வடிவங்கள் மட்டுமே உயிர்கட்குப் போதுமானவை என்ற கருத்து எழுத்துச் சீர்திருத்தம் வேண்டும் அறிஞர்களிடையே நிலவுகின்றது. மேற்சுட்டப்பட்ட 2-ஆம் பரிந்துரையில் இதனைக் காண்கிறோம். தவிர, நீட்சியைத் தனி ஒலியனாகக் கருதுதலும் சில மொழியியலாரிடம் (கமில் சுவலபில் முதலியோர்) காணப் படுகிறது. இம்மொழியியலாரும் ஆறு வரிவடிவங்களை (5 குறில் + 1 நெடில்) மட்டுமே கொள்கின்றனர். தமிழில் ஐந்து குறில் களின் முழுமையாக ஒத்த நீட்சியாக நெடில்கள் ஐந்தும் இல்லை என்பது இவண் குறிக்கத் தகுந்தது. குறில்களை விட நெடில்களின் ஒலிப்பு அளவு (duration) மிகுதியாக உளது

உண்மையே ஆயினும் ஒலித்தன்மை குறிலுக்கும் நெடிலுக்கும் இடையே முற்றிலும் ஒத்ததாக இல்லை. குறிலும் நெடிலும் ஒலிப்பு முயற்சியில் சிறிது வேறுபடுகின்றன. இரண்டும் பிறக்கையில் ஒலியுறுப்பு மாறாத ஒத்த நிலையில் அல்லாமல் சிறிது வேறுபட்டு அமைகின்றன. எனவே உயிர்கள் 12 என்று கொள்ளுதலே (ஐ.ஔ கூட்டெழுத்துக்கள்) ஏற்புடையது.

சொல்லியல்

சொல்லின் விளக்கம், சொல்லில் அமையும் இலக்கணக் கூறுகள். வகைகள், வேற்றுமை, தொகை எனும் செய்திகள் சொல்லியலில் விவரிக்கப்படுகின்றன.

திணை, பால், எண், இடம், காலம் ஆகிய ஐந்து இலக்கணக் கூறுகளையும் ஆசிரியர் 'ஐந்தொகை' என்று சுட்டுகின்றார் (48). ஐந்தொகை எனும் சொல்லாட்சி புதியதாகும்.

பெயர், வினை இடை, உரி எனும் நான்கினையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முதல் மூன்றும் சொல்லியலிலும் நாலாவது ஒழிபியலிலும் கூறப்படுகின்றன. எனினும், எடுத்த எடுப்பில், 'வினை பெயர் இரண்டாய்' (42) என்று சொல் இருவகைப்படும் என்று கூறுதல் காணப்படுகிறது. உரிச்சொல் பெயர்,வினைகளின் அடைகளாக வரும் என்றும், இடைச்சொல் பெயர், வினைச் சொற்களின் ஆக்க உருபாகவும் தொடரில் பொருண்மை இயைபுறுத்தும் (சார்பு) ஒட்டுக்களாகவும் வரும் என்றும் கருதுகின்றமையால், தனித்து வழங்குதற்குரிய பெயர், வினை இரண்டனை மட்டுமே சொல் வகைகள் என்று இந்நூல் குறிப்பிடுகின்றது.

பெயர்ச்சொல்

உலகப் பொருள்களைப் பிரித்தறி யும்படிப்
பெயர்த்துக் குறிபெய் துரைத்தல் பெயரே

என்பது பெயர்ச்சொல் குறித்த விளக்கமாகும் (58). பெயர்கள் யாவும் காரணம் பற்றியனவே. ஆனால் நாளடைவில் காரணம் மறைந்த நிலையில் இடுகுறிப் பெயர்கள் என்று கருதப்படுகின்றன (59).

யான், நான், யாம், நாம், யாங்கள், நாங்கள், நீ, நீர். நீங்கள் (54) நீம் (72) ஆகிய தன்மை, முன்னிலைப் பெயர்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன இவற்றுள் யகர முதற் சொற்கள்

இக்கால வழக்கில் இல்லாதனவாகும். நீம் எனும் முன்னிலைப் பன்மைப் பெயர் இக்காலத்தில் நீங்கள் எனும் இரட்டைப்பன்மை வடிவத்தில் மட்டுமே காணப்படுகின்றது. தொல்காப்பியர் காலத்திலேயே மறைவுற்ற இப்பெயரைத் தொல் திராவிட வழக்கினது என்று மொழியறிஞர் உறுதி செய்துள்ளனர். இதனால் ஆசிரியர் நீம் என்பதையும் சேர்த்துக் கூறுகின்றார்.

அறுவகைப் பெயர்கள் (பொருள் முதலியன), தொழிற் பெயர், வினையாலணையும் பெயர், ஆகுபெயர் ஆகியன முந்தை நூற்களைப் பின்பற்றி விளக்கப்படுகின்றன.

நீந்துகிறவன், தந்தவன், காண்பவன் போன்ற வினையால ணையும் பெயர்கள் பெயரெச்சம் + சுட்டுப்பெயர் (நீந்துகிற+ அவன்) எனும் அமைப்புடையன என்று ஆசிரியர் உரைக் கின்றார் (65). இக்கூற்று 'காண்பவன்' போன்ற எதிர்காலச் சொற்களுக்கு ஏற்றதன்று. இக்கால மொழியியல் கருத்தின் தாக்கம் உள்ள இடங்களில் இதுவும் ஒன்று.

வேற்றுமை

ஒடு, ஓடு உடன் என்பன உடனிகழ்வுப் பொருளிலும் ஆன், ஆல் என்பன கருவிப்பொருளிலும் மூன்றாம் வேற்றுமையில் வழங்கும் (75). உடனிகழ்வு, கருவிப் பொருள்களில் வழங்கும் உருபுகளைப் பிரித்துக் காட்டுதல் சிறப்பானதாகும்.

நின்று, இருந்து, உடைய, விட, கொண்டு, கூட, பொருட்டு, இடத்துப் போன்ற சொல்லுருபுகள் வேற்றுமை உணர்த்துதலை யும் ஆசிரியர் (80) உரையில் சுட்டுகின்றார். நின்று, இருந்து, விட என்பன முறையே இன், இல், ஐ உருபுகளோடு இணைந்து வரும்.

பிற வேற்றுமைச் செய்திகள் முந்தை நூல்களில் காணப்படு வனவாகும்.

வினைச்சொல்

பொருளின் புடை பெயர்ச்சியைக் காலத்தோடு காட்டும் நிகழ்ச்சி வினை எனப்படும் (86).

வினை விகுதிகளைக் கூறுமிடத்து, இக்கால வழக்கும் பண்டை வழக்கும் பிரித்துக் காட்டப்படுகின்றன.

| இக்கால வழக்கு | | பண்டை வழக்கு (இக்காலத்து மறைந்தவை) | |
|---|---|---|---|
| ர்,கள் | — பலர் | பால் | — ப, மார் |
| ஏன் | — தன்மை | ஒருமை | — அல், என், அன் (அன் என்பது இடைக்கால வழக்கு) |
| ஆய்,ஐ | — முன்னிலை | ஒருமை | — இ |

உண்டனை போன்ற ஐ விகுதிச் சொற்கள் இக்காலத் தமிழில் வழங்கவில்லை என்பது குறிக்கத் தக்கது. கு,டு,து,று, கும்,டும்,தும்,றும் எனும் தன்மை விகுதிகள் பழந்தமிழில் இடம் பெற்றிருந்தமையை இந்நூல் (96) குறிப்பிடுகின்றது.

உம் விகுதி உயர்வொருமையிலும் உங்கள் விகுதி பன்மையிலும் முன்னிலையில் வழங்குதலை ஆசிரியர் (98) குறிப்பிடுகின்றார். இக்காலப் பேச்சு வழக்கில் உம் குறைந்த மரியாதையும், உங்கள் நிறைந்த மரியாதையும் குறிக்குமாறு ஏவல் ஒருமையில் வழங்குகின்றன. ஏவல் பன்மையில் உங்கள் விகுதி வழங்குகிறது. ஆசிரியர் குறிப்பிடும் (99) ஏவல் விகுதி மின் இக்கால வழக்கில் இல்லை. உம் எனும் பன்மை விகுதி ஒருமையில் வழங்கிய நிலையில் கள் விகுதி அதனோடு இணைந்து பன்மையில் வழங்கலாயிற்று.

இக்கால மொழி வழக்கிற்கு இலக்கணம் சொல்லவந்த ஆசிரியர் முற்கால மொழிவழக்கை அறிவிக்கும் முயற்சியினையும் மேற்கொள்கின்றார். ஆசிரியரின் இந்நோக்கு ஒழிபியலில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

செய்து, செய்ய, செய்யின் எனும் மூன்று வாய்ப்பாடுகளில் முறையே இறப்பு, நிகழ்வு, எதிர்வுக் காலங்களில் வினையெச்சம் வழங்கும் (110). இம்மூன்றும் இக்கால வழக்கில் பரவலாக உள்ளமையால் இந்நூல் இவற்றைக் கூறுகின்றது.

இரு, இடு கொண்டு போன்ற துணைவினைகள் வழங்குதலும் இங்குச் சுட்டப்படுகின்றது (102). இத்துணை வினைச் சொற்கள் இணைந்து இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் மூன்றனையும் இறப்பிறப்பு, இறப்புநிகழ்வு, இறப்பெதிர்வு, நிகழ்விறப்பு, நிகழ்வுநிகழ்வு நிகழ்வெதிர்வு, எதிர்விறப்பு, எதிர்நிகழ்வு, எதிர்வெதிர்வு சேர்ந்த பன்னிரண்டாகக் காலத்தை வகைப்படுத்துகின்றன (57). இத்தகைய கால அமைப்பு இக்கால வழக்கில்

உளது. எனினும், இலக்கணம் கூறும் பாங்கு ஆங்கிலமொழித் தாக்குதலால் ஏற்பட்டுளது எனலாம்.

### தொகை

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் கருத்தூட்டத்திற் காகக் தமக்கிடையில் பொருளியையபுறுத்தும் இடைச்சொற் பொருள் தோன்ற இரண்டு முதலாம் சொற்கள் கலந்து ஒரு சொல்போல நிகழ்வது தொகைச் சொல்லாம் (114). ஒரு சொல் நீர்மை எனும் கோட்பாடு இந்நூலாசிரியர்க்கும் உடன் பாடாக உளது.

### இடைச்சொல்

இந்நூல் குறிப்பிடும் இடைச்சொற்களும் ஊம், ஆம், சரி எனும் மூன்றும் முந்தை நூற்களில் கூறப்படாதனவாகும். இவற்றுள் ஊம் என்பது மேலும் செய்தியைக் கேட்கின்ற குறிப்பு (மேற்கொளல்) (141) ஆம், சரி என்பன உடன்பாடு, பேச்சி டையே அசை (மேலும் கேட்கின்ற குறிப்பு) (142,42) எனும் பொருளில் வழங்கும்.

தான் என்னும் பொதுத்திணைப் பெயர் ஏகார இடைச் சொல் போன்று தெளிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய பொருளில் வரும் என இந்நூல் (139) கூறுகிறது.

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா

இப்பாடல் வரியில் தான் அசைநிலையில் வருதலை ஆசிரியர் காட்டுகின்றார். இங்கு அசைநிலையில் மட்டுமன்றி, இளிவரல் குறிப்பிலும் தான் வருகின்றது. இடைச்சொற்கள் அசைநிலை, இறைநிறை போன்ற ஒலிப்பிண்டமாக வருமிடம் தவிர, பிரிநிலை, தெளிவு. கழிவு போன்ற குறிப்புப் பொருள்களை உணர்த்துதல் அவ்விடைச் சொற்கள் சாரும் (முன்னும் பின்னும் வரும்) பெயர், வினைச்சொற்களைப் பொறுத்தே அமைகின்றன. இடத்திற் கேற்பப் பொருள் உணர்த்துதல் பற்றி இவ்வகைச் சொற்கள் இடைச்சொற்கள் எனப்படுகின்றன. இடச்சொல் நாளடைவில் இடைச்சொல் என (அகரம் ஐகாரமாக) ஒலிமாற்றம் பெற்றுளது

### உறுப்பியல்

நன்னூலின் பதவியல் இந்நூலில் உறுப்பியல் எனப் பெயர் பெற்றுளது. செய்திகள் பெரும்பான்மையும் நன்னூலினின்று வேறு

பட்ட கருத்துக்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன. இக்கால மொழியியலாய்வு இவ்வேறுபாட்டிற்குக் காரணமாகும்.

நன்மை, செம்மை என்பனவற்றை நன்னூல் பண்புச் சொற்களின் பகுதி என்று கருதுகிறது. ஆனால் உண்மையில் பண்புப்பெயர்களாகும். இதனை இலக்கண விளக்கம் (45) தெளிவாக்குகிறது. இச்சொற்களில் நன், செம் என்பனபவ பகுதி என்று இந்நூல் (154) சரியாகக் குறிப்பிடுகின்றது.

உவம உருபுகளின் அடியாகப் பிறக்கும் சொற்களில் அகர இறுதியாகப் பகுதியைப் பிரித்தல் வேண்டும் (155). ஒத்தான் ஒ (ப்ப) + த் + த் + ஆன், அற்று — அன் (ன) + து, அனையர் — அனை (ய) + அர். இத்தகு பகுப்பு முறை மரபிலக்கண நெறியே அன்றி, அறிவியல் வழிப்பட்டதன்று.

கொணர்ந்தான் என்பது கொண்டுவந்தான் எனும் தொடரிலிருந்து உருவானது என்றும், கொணா என்பது அதன் பகுதி என்றும் தமிழ் நூல் (156) குறிப்பிடுகிறது. கொண்டு வா என்பதன் 'டுவ் அசை கெட்டுளது. இது ஒரு மரூஉ வழக்கு (haplology) ஆகும்.

வா, தா எனும் இரு பகுதிகளும் சொல்லில் முறையே வம், வரு, வார்; தம், தரு தார் எனும் முத்திரிபுகளை எய்தும் (157). இக்கூற்று அடிச்சொல்லைக் கருதியமைந்ததாகும்.

வினைப்பகுதியோடு நன், நள், நர் விகுதிகள் இணைந்து உயர்திணைப் பெயர்கள் அமையும் (161).
மகிழ்நன் ஆடுநர் வாழ்நர்

இவ்வகைச் சொற்களில் அன், அள், அர் என்பவற்றை விகுதியாகவும் நகரத்தைப் பெயரிடை நிலையாகவும் முன்னை நூல்கள் கருதுகின்றன (தொ.வி.85)

தல், அல், அம், ஐ, கை, வை, பு, உள், இல், தி, சி, வி, வு, இ, து, காடு (சாக்காடு), பாடு (கோட்பாடு) என்பனவற்றை நூற்பாவிலும், மதியை (ஏற்றுமதி) உரையிலும் தொழிற்பெயர் விகுதிகளாக இந்நூல் தொகுத்துரைக்கின்றது (162).

இவற்றுள் து விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் வினையாலணையும் பெயர்கள் போன்று காலம் உணர்த்தும் என ஆசிரியர் உரைக்கின்றார்.

அங்கு வருவது பையன். வருவது என்பது வருதல் எனும் பொருளில் இடம்பெறுவதாக ஆசிரியர் கருதுகின்றார். உண்மையில் அஃறிணைப் பொருள் உயர்திணையில் மாறி வருவதனையே இங்குக் காண்கின்றோம். இத்தகு பொருள் மாற்றம் இக்காலத் தமிழில் பரவலாக உளது. அம்மா வந்தது, அப்பா வருகிறது என்பன போன்ற பேச்சு வழக்கில் இதனை அறியலாம்.

இவை தவிர முதனிலையேயும் முறுக்கு. சுருட்டு, முதனிலை நீண்டும் தொழிற்பெயராக (ஊண், உலா) வழங்குதலையும் உரை குறிப்பிடுகின்றது.

த், ட், ற், இன், ன், இ என்பவற்றை இறந்தகால இடைநிலைகள் என இந்நூல் (171) சுட்டுகின்றது. ஆனால் ன், இ இரண்டனையும் 'இன்' என்பதன் திரிபு என்று நன்னூல் கருதுவதனால், அது ன், இ இரண்டனையும் எடுத்துரைக்கவில்லை,

(பெரும்பான்மையும்) இன் இடைநிலை உகரவீற்றுப் பகுதிச் சொற்களில் அமையும் (172).

பாடினான் வாங்கினான்.

ஆ, இல், அல் என்பன எதிர்மறை இடைநிலைகளாகும் (173). இவற்றுள் ஆகார இடைநிலை நெடில் முதல் சொற்களில் அமையும் (174).

ஓடான் கண்டிலன் காணலன்

அத்து, அம், அன், இன், அற்று, தன், தம், அ, ஐ, உ, ன, கு என்பன சாரியைகளுட் சிலவாகும் (179). சாரியைகட்குத் தரும் சான்றுகளுள் ஆட்டம் என்பதில் வரும் அம் தொழிற் பெயர் விகுதியாகும். அம் தொழிற் பெயர் விகுதியாதலை இந்நூல் (162) குறிப்பிட்டு, ஆசிரியர் நோக்கம் என்பதனை அதற்குச் சான்று காட்டியுள்ளார். ஆடு என்பதன் அடியாக ஆடல் (அல்) எனும் தொழிற் பெயர் அமைவதனால் பகுதியொற்று இரட்டித்து அமையும் ஆட்டம் போன்றவற்றைச் சாரியை இணைந்த சொற்கள் என்று இந்நூல் கருதுகிறது போலும்! இவ்வாறே விழுந்தது, விழுந்தவை என்பவற்றில் காணப்படும் படர்க்கை உருபன் அகரத்தையும் இந்நூல் சாரியை எனப் பிறழக் கூறுகின்றது 182).

இ(வில்லி) ஆளன், காரன், ஆட்டி (திருவாட்டி), காரி, ஆளர் காரர் ஆகிய புதிய பெயர் விகுதிகளும் இந்நூலில் (185) காணப்படுகின்றன (185.)

புணரியல்

புணர்ச்சிச் செய்திகள் புணரியல் எனும் ஒரே இயலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. செய்திகளுட் சில தவிர ஏனைய நன்னூலில் கூறப்பட்டுள்ளனவே.

பிற எனும் சொற்பின்னர் அற்றுச் சாரியை வரும் (214).
பிற+ஆல்>பிறவற்றால்

ஆகாரவிறுதி ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச முன்னர் வலிமிகும். ஆனால் ஆகாரவிறுதி ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாயின் மிகாது (216).

ஓடாக்குதிரை
சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ (குறள்)

செலவிடா என்பதை இந்நூல் துகரவீறு (செலவிடாது) கெட்ட வினையெச்சம் என்று கருதுகிறது. இதனைத் தொல் காப்பியம் (1:7:20)'செய்யா' வாய்பாட்டு வினையெச்சம் என்று குறிப்பிட்டு, இவ்வகைச் சொற்களோடு வலி புணரின் வலி மிகும் என்று கூறுகிறது. திருக்குறளில் காணப்படும் 'செலவிடா' என்பது 'செலவிடாது' என்பதன் மரூஉ வழக்காகலாம். இன்றேல் செலவிடாது தீதொரீஇ' என்பதே குறளின் உண்மை வடிவ மாதல் வேண்டும். வாய்மொழியாகப் பயிலப்பட்டு வந்தமையால் நாளடைவில் துகர அசை விடுபட்டிருக்கலாம்.

பெருந், கரும் எனும் பண்படைகள் உயிரால் தொடரப் படுங்கால் முறையே பேர், கார் என்றாகும் (223). அது, இது எனும் சுட்டுப்பெயர்கள் உயிர்வருங்கால் அஃது, இஃது என முறையே வழங்கும் (224). அது என்பது ஆன் சாரியை பெறாது. (225)

பெரும் பேராசிரியர் பேரறிஞர் கருங்குரங்கு காரிருள்
அது பொத்தகம் அஃதுடம்பு

அதை, அதுக்கு எனச் சாரியை பெறாதனவற்றை 'ஒதுக்க வழக்கு' என ஆசிரியர் குறிப்பிடுகின்றார் நச்சினார்க்கினியர் முதலிய முந்தை உரையாசிரியர்களின் பாணி இதுவாகும். இக் கால வழக்கினவாகிய இச்செய்திகளை ஒதுக்குதல் உயரிய இலக்கண நெறியாகாது.

வன்றொடர் முன்வலி இருவழி மிகுமே (231).

இவ்விதி தொல்காப்பியம் தொட்டு வருவதாகும். எனினும் 'கள்' விகுதியைச் சேர்க்குங்கால் இக்காலத் தமிழாசிரியர்களால் இவ்விதி ஒருமித்துப் பின்பற்றப்படுதல் இல்லை. வலி மிகுதலும் மிகாமையும் ஆகிய இருநிலை காணப்படுகின்றது. குறிப்பு+கள்>குறிப்புகள் என்றும், கருத்து+கள்>கருத்துக்கள் என்றும் வழங்கலாம் எனும் ஆசிரியர், கருத்துகள் என ஒற்றுமிகாமையே நன்று என்று உரைக்கின்றார். இவ்வுரை இக்கால வழக்கின் வெளிப்பாடாகும். வல்லொற்று மிகுதல், மிகாமை ஏன் தொடக்கக்காலத்தில் உருவானது என்பதை உணராமையால் இன்று மயக்க நிலை ஏற்பட்டுளது. வல்லெழுத்துக்கள் தொல்திராவிடக் காலத்தில் ஒலிப்பில் வெடிப்பொலியாக வழங்கி, நாளடைவில் ஒலிப்புடை ஒலியாகவும் உரசொலியாகவும் ஒலிக்கப்படுதலாயிற்று. இப்பிளவு தமிழில் சூழலால் கட்டுண்டு மாற்றொலித் தகுதியைப் பெற, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பல மொழிகளில் பொருளை வேறுபடுத்தும் ஒலியனாகவும் வழங்குதலாயிற்று. ஒலிப்பில் வெடிப்பொலியாக வருமிடத்து அழுத்தி ஒலித்தமையால் வல்லெழுத்தினை மிகுத்து எழுதினர். ஏனையிடத்து மிகாத நிலை ஏற்பட்டது. இவ்வேறுபாட்டில் பொருண்மை வேறுபாடு உண்மையில் இல்லை எனினும், வேறுபாட்டினைச் சில தமிழாசிரியர் கற்பிக்கலாயினர். உண்மையில் பொருள் வேறுபாடு அல்லது புலப்பாடு என்பது உரையாடல் அல்லது சொல் வழங்கும் சூழலைப் பொறுத்ததே. பொருப்புகள் என்றால் மலைகள் என்றும் பொருப்புக்கள் என்றால் மலையில் விளைந்தகள் என்றும் பொருள் உரைப்பாரும் இத்தகையோரே.

ஒன்று, இரண்டு எனும் எண்ணுப் பெயர்கள் அடையாகுங்கால் உயிரால் தொடரப்படின் ஓர், ஈர் என்றும் மெய்யால் தொடரப்படின் ஒரு, இரு என்னும் வழங்கும் (237). இன்றைய மக்கள் மொழியில் இவ்வேறுபாடு தெளிவாக இல்லை. ஆனால் தமிழாசிரியரிடம் வலியுறுத்தப்படுகிறது.

தொண்பது எனும் பெயரே ஒன்பது எனத் திரிந்துளது (240). இக்கால மொழியியல் அறிவின் வெளிப்பாடு இவ்விதியாகும். தொண்டு = 9, தொண்பது (ஒண்பது) = 90, தொண்ணூறு = 908, தொள்ளாயிரம் - 9000 என்று ஆசிரியர் உண்மையினை உரையில் புலப்படுத்துகிறார்.

ஆய் விகுதி வினையெச்சம் முன் வலி மிகும் (248).
அன்பாய்ச் சொன்னார்

ழகரம் சிலவிடத்து ளகரம் போல டகரமாகவோ ணகர மாகவோ திரியும் (252).

கீழ்+திசை > கீட்டிசை திகழ்+சக்கரம் > திகடசக்கரம் வாழ்+நன் > வாணன்.

இவ்விதி வீரசோழியத்தில் காணப்படுகிறது. நாடு (நாழி+உரி) என்பதில் ழகரம் டகரமாதலைத் தொல்காப்பியம் (1:7:38) சுட்டுகின்றது. எனவே ழ்>ட், மாற்றம் தொல்காப்பியத் திலேயே நிகழ்ந்தவொன்றாகும். இடைக்காலத்தில் ழ்>ட், ழ்>ண் மாற்றத்திற்கான சான்றுகள் பரவலாக இலக்கியங்களில் காணப் படுவதால், மக்கள் வழக்கில் பல்கிற்று எனலாம். இதனால் வீர சோழியம் இலக்கணம் கூறியது. ஆனால் பிற்காலத்துத் தோன்றிய நூற்கள் மொழி வழக்கைப் பெரிதும் பேணாது, தொல் காப்பியம் முதலிய முந்தை மரபிலக்கண நூற்களைப் பேணு கின்றமையால் இவ்வொலி மாற்றத்தைக் கூறவில்லை.

பொதுவியல்

தொல்காப்பியம் மரபியலில் கூறிய செய்திகளுள் சில வற்றை இந்நூல் மரபு எனும் பகுதியில் குறிப்பிடுகிறது. இளமைப் பெயர்கள் குஞ்சு, குட்டி, கன்று, பிள்ளை என்பன முறையே பறவை, விலங்கு, மரம் (தாவரம்), மக்களுக்கு உரியனவாக வழங்குகின்றன (286. 289). தொல்காப்பியத்தின் (3:9:45) பார்ப்பு எனும் இளமைப் பெயர் பாப்பு, பாப்பா, பாப்பாத்தி என்று பெண் இளமைப் பெயராக மக்களிடையே வழங்குகின்றது (288). இச்செய்தி இக்கால மொழி வழக்கைப் பற்றியதாகும்.

இயற்பெயருக்கு முன்னோ பின்னோ சிறப்புப்பெயர் வரும் (293).

பாவேந்தர் பாரதிதாசன், முனைவர் சி. இலக்குவனார் மு.க.மெ.மு.

கல்வி முதலியவற்றால் எய்த சிறப்புப்பெயர்கள் (பட்டங் கள்) முன்னும் பின்னும் அமைதல் பற்றியது இச்செய்தியாகும்.

ஒருவள் எனும் பெயர் ஒருத்தி என்பதற்கு மாற்றுருபாக வழங்குதலை இந்நூல் (309) சுட்டுகின்றது.

ஒருவன் என்பதற்கு மாற்றுருபாக ஒருத்தன் எனும் சொல் திருவிளையாடலில் இடம்பெற்றுள்ளதைச் சுட்டி, ஒருத்தி

என்பதற்கு மாற்றாக ஒருவள் என்பது சிறுவழக்கிலிருந்து மறைந்திருக்கலாம் என்று ஆசிரியர் உரைக்கின்றார். ஒருவள் எனும் பெயரைச் சில கதை ஆசிரியர்கள் புத்தாக்கமாக எடுத்தாளுதல் இன்றுளது. எனினும் பேச்சுவழக்கிலோ தமிழாசிரியர் எழுத்து வழக்கிலோ இது இடம்பெறவில்லை. இது ஆசிரியரின் புத்தாக்கமாகும்.

ஆய் எனும் வினையெச்சம் வினைமுற்றை அடுத்து வந்து எச்சமாக்குதற்குரியது. அவ்வாறு வருங்கால் ஆக்கப் பொருளில் மட்டுமன்றி, வெற்றுருபாகவும் அமையும் (313).

உடல் நன்றாய் விட்டது — ஆக்கம்
நாய் நன்றாய்க் கடித்தது — வெற்றுருபு,

இங்கு 'நாய் நன்றாய்க் கடித்தது' என்பதில் ஆய் வினையடையாக வருகின்றது.

ஆவது என்பது எண் குறித்தற்கும், ஒன்றை நீக்கி மற்றொன்றைக் கூட்டுதற்கும், விளக்கத்திற்கும் வரும் (314).

இரண்டாவது கிழமை — எண் குறித்தல்
நீயாவது அவனாவது வருக — நீக்கிக் கூட்டல்
பொதுவுடைமையாவது எண்ணத்து வகையிலும் ஏற்றத் தாழ்வற்ற குமுகாயத்தை எல்லாத் துறையிலும் படைப்பது — விளக்கம்.

முறை எண்ணுப் பெயரை (Ordinal number) எண் குறித்தல் என்று ஆசிரியர் சுட்டுகின்றார்.

ஒருக்கால், ஒருகால் என்பன முறையே ஐயம், பொழுது எனும் பொருளை உணர்த்தும் (315).

ஒருக்கால் நான் வராவிட்டால் — ஐயம்
ஒருகால் நினைக்கில் — பொழுது

இவ்விரு தொடர்களிலும் அண்மை உறுப்பின் சூழலுக்கேற்பவே பொருள் வேறுபாடு அமைகிறது. இவ்வாறே 'ஒருக்கால் வராவிட்டால், ஒருகால் முறிந்தால்' என்பவற்றிலும் பொழுது, உறுப்பு எனும் வேறுபாடு சூழலை ஒட்டியதே எனலாம்.

சொற்கள் பொருள் மாற்றமும் வடிவமாற்றமும் அடைதலை இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார் (318-342). அவற்றுட் சில :

வேண்டும் என்பது விருப்பம் என்ற பொருள் மாறி தேவை எனும் பொருளிலும், காணாம் என்பது தன்மைப் பன்மை என்பதிலிருந்து காணவில்லை எனும் பொருளிலும் வழங்குகின்றன. பச்சை என்பது பசுமை என்பதோடு பண்பை மிகுதிப்படுத்தும் மிகுதிப்படுத்து (மிகுதி) பொருளிலும் வழங்குகின்றது.

பச்சைக் காய்கறி, பச்சைக் குழந்தை

சொல்லின் யகரமுதல் கெடுதலும், ஊர்ப் பெயர்கள் சுருங்கி ஐ, ஈறு பெறுதலும் உண்டு.

யானை > ஆனை　　யார் > ஆர்
தஞ்சாவூர் > தஞ்சை　　மன்னார்குடி > மன்னை

இன்னும் சில :

கருப்புக்கட்டி > கருப்பட்டி　மேனிக்கேடு > மெனக்கேடு
தாழ்விலை > தாவிலை > தேவலை
விளக்கும்வார் > விளக்குமார்

எதிரொலிச் சொற்கள் (echo words) கிகர முதலை இரண்டாம் சொல்லில் உடையது (321).

பாய் கீய், தந்து கிந்து,

இரு பொருளில் ஒன்று இன்மையைக் குறிக்க அன்மைச் சொல்லும், ஒன்றுமே இன்மையைக் குறிக்க இன்மைச் சொல்லும் வழங்கும் (334).

ஐந்தன்று இரண்டு, ஐந்தில்லை,

முகவரி எழுதுங்கால் ஊர், தெரு, பெயர் எனும் முறையிலும் (339) காலத்தை ஆண்டு, திங்கள், நாள், எனும் முறையிலும் (340) வழங்குதல் வேண்டும். இதற்குமாறான இன்றைய வழக்கு ஆங்கில வழக்கு ஆகையால் மாற்றுதற்கு ஆசிரியர் விழைகின்றார், தனித் தமிழியக்க ஆர்வத்தின் வெளிப்பாடுகளுள் இதுவும் ஒன்று.

ஒழிபியல்

பொருத்தமற்ற கருத்துக்கள் என்று கருதி முன்னை இயல்களில் கூறாது ஒழிந்த சில கருத்துக்களை ஆசிரியர் இங்குக் கூறுகின்றார். 'பண்டை இலக்கணம் இலக்கியம் பயில்வார்

கண்டு உணர்தற்கு' இவற்றை இங்குக் குறிப்பிடுவதாக அவர் கூறுகின்றார். (344). இங்கு உரிச்சொல், குறிப்புவினை, சார்பெழுத்து, ஒலிபெயர்ப்பு (பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தல்) என்பன குறித்த தம் கருத்துக்களை ஆய்வுமுறையில் சுட்டிக் காட்டுதல் சிறப்பான இயல்பாகும்.

உரிச்சொல்

செய்யுட் குரியதாய் வருமெனப் படும்உரி
பெயர்வினை முன்னடை யாய்வரும் பண்பே ...(344).

இந்நூல் நன்னூலைப் போன்று உரிச்சொற்களைச் செய்யுளில் உரிமை பூண்டு வரும் அடைகள் என்று சுட்டு கின்றது.

குறிப்புவினை

பெயரின் இயல்பைக் கொண்டு, மூவிட விகுதிகளைப் பெற்றுக் காலத்தைக் குறிப்பாக உணர்த்துகின்றமையால் குறிப்பு வினை என்று முன்னை நூற்கள் கூறுகின்றன (351) என்று கூறும் இந்நூல், வேற்றுமை உருபேற்றிடும் வினைமுற்றுக்களை வினையாலணையும் பெயர்கள என்று கொண்டது போன்று கால உணர்ச்சி ஊட்டும் பெயர்ச்சொற்களைக் குறிப்புவினை என்று ஐயுறுகின்றது. இந்நூற் கருத்துப்படி இவ்வகைச் சொற்கள் உண்மையில் பெயர்ச்சொற்களேயாகும். (353).

பொன்னன் எனும் சொல் முருகன் நேற்றும் பொன்னன், இன்றும் பொன்னன் என்று கால உணர்ச்சியை ஊட்டுவதாக ஆரியர் கருதுகின்றார். இங்குக் கால உணர்ச்சி நேற்று, இன்று என்பனவற்றால் பெறப்படுகின்றதே அன்றி, பொன்னன் எனும் சொல்லால் அன்று. இவ்வகைச் சொற்கள் உண்மையில் பெயர் களே. இவை மூவிட விகுதிகளை ஏற்று, பயனிலையாக வழங் கினமையால் வினைச்சொற்களாகக் கருதப்பட்டன.

சார்பெழுத்து

நன்னூல் குறிப்பிடும் சார்பெழுத்துக்கள் பத்தனையும் முதலெழுத்திலிருந்து தோன்றுதல், முதலெழுத்துக்களைச் சார்ந்து தோன்றுதல் என்று இந்நூல் (360) இருவகைப்படுத்து கின்றது. ஆய்தம் முதலெழுத்துக்களைச் சார்ந்து தோன்றும். ஏனைய முதலெழுத்துக்களிலிருந்து தோன்றும். மேலும்

இந்நூல் உயிர்மெய், ஆய்தம் இரண்டும் தவிர்த்த ஏனைய வற்றைச் சார்பெழுத்து எனல் தகாது என்று மறுக்கின்றது,

குற்றியலுகரம் குறுகாமல் இக்காலத்து ஒலிக்கின்றது. இதுவும் குற்றியலிகரமும் புணர்ச்சியில் இடம் பெறுவனவாகும் (361). கேளும்+ஐயா என்பதே கேண்மியா என்று திரிந்துளது என்கிறார் ஆசிரியர்.

அளபெடைகள் முதலெழுத்துக்களின் ஒலி நீட்சியாதலால் சார்பு எனல் தகாது. அளைஇ, நசைஇ என்பன சொல்லிசையள பெலடயல்ல; வினையெச்ச வடிவங்களாகும். இங்கு வரும் இகரம் வினனயெச்ச விகுதியாகும் (365).

ஐகாரம் சொல்லின் மூவிடத்தும் குறுகி ஒலிப்பதால் அது போலியுள் அடங்கும் (ஐம்பது—அம்பது). தன்னைத் தனித்துக் குறிக்கும் போதன்றிப் பிறவிடத்தெல்லாம் குறைந்துவிடும் எனின் ஐயின் இயல்பே இதுவன்றோ? (366). மொழியில் மூவிடத்தும் வருங்கால் ஒரு மாத்திரையாக ஒலிக்குமாயின், ஐகாரத்தின் இயல்பே ஒரு மாத்திரைதான். அவ்வாறாயின் அது குறுகுதற் கிடமில்லை. உண்மையில் அ+ய் என்னும் கூட்டெழுத்தே ஐகார மாகும். இதனைத் தனி எழுத்தாக வடமொழி போன்று ஏற்று நெடிலாகக் கொண்டதனால் இக்குழப்பம் நேர்ந்துளது. இவ்வாறே ஔகாரக் குறுக்கம் என்பதும் இல்லை என்கிறார் ஆசிரியர் சரவணத் தமிழன் (367). ஐ,ஔ என்பன முறையே அ+ய், அ+வ் எனும் கூட்டு வடிவங்களாகும் என்பது இந்நூற் கருத்து.

மகரக்குறுக்கமும் (368) ஆய்தக் குறுக்கமும் (369) புணர்ச்சியுள் அடங்கும்.

ஒலிபெயர்ப்பு

வடமொழி, ஆங்கில மொழிச் சொற்களைத் தமிழ் ஒலிக் கேற்ப மாற்றி அமைக்கும் முறை இங்குக் கூறப்படுகின்றது,

வடமொழியாக்கம் நன்னூலை ஒத்துக்காணப்படுகின்றது. எனினும் பின்வரும் புதிய செய்திகளும் காணப்படுகின்றன.

க்ஷ் > ட்ச் — மீனாக்ஷி > மீனாட்சி
ஹ் > ய் — மஹேஸ்வரன் > மயேச்சுரன் (371)

ஹ,ய என்பவற்றின் உயிர்மெய் வடிவங்களில் மெய்கெடும்(373)

ஹரப்பா > அரப்பா ஹிம்சை > இம்சை ஹீனம் > ஈனம்
ஹென்றி > என்றி ஹோமர் > ஓமர் Head > ஏட்டு
யமுனை > அமுனை யசோதை > அசோதை யுகம் > உகம்

இவ்வாறே ஐகர உயிர்மெய்யும் அமைதலை உரை குறிப்பிடுகிறது.

ஜெருசலம் < எருசலம்

Henry என்பது சொற்களை என்றி என எழுதினால் றகரத்தில் ஆடொலியை (ர்ர்) முந்தைய அறிவினாலேயே உணரமுடிகின்றது. எழுத்தளவில் ஆடொலியா, வல்லொலியா (பன்றி, நன்றி) ஐயம் உளது. எனவே இத்தகையவற்றை என்ரி என எழுதலாம். இதில் உள்ள ன், ர் இரண்டுமே தமிழொலிகள் என்பதால் புதிய மெய்ம்மயக்கம் குறித்துக் கவலுதல் தேவையன்று.

F,Z எனும் பிற மொழி ஒலிகட்காக ஆய்தத்தை முறையே ப,ச முன் எழுதுதலை இந்நூல் கூறுகிறது (375). இது இக்காலத்துச் சிலர் எழுதலை உட்கொண்ட கருத்தாகும்.

Africa > ஆஃபிரிக்க
Zebra > ஃசீபுரா French > ஃபிரெஞ்சு.

இங்கு இடையில் வருதல் எனும் பழைய நெறி மாறியுளது. டகர முதற்சொற்கள் தகர முதலாக எழுதப்படுழ் (378).
டார்வின் > தார்வின் டேனியல் > தேனியல்

இடையிலும் ஈற்றிலும் தனிமெய்வரின் அதனோடு உகரம் சேர்த்து எழுதப்படும் (379). முந்தை நூற்களில் கூறப்படாத மெய்ம்மயக்கத்தையே இந்நூல் இடை எனக் குறிப்பிடுகிறது.

பக்வம் > பக்குவம், பஞ்சாப் > பஞ்சாப்பு. சிங் > சிங்கு.

இவ்விதியும் தேவையற்றதாகும். காலத்திற்கேற்பப் புதிய புகுதலாக பக்வம், சிங் போன்றவற்றை ஏற்கலாம். பிறமொழி ஒலியை ஏற்கும்போது தான் ஒருமொழி சிதைகின்றது. இவற்றில், தமிழொலிகளே உள்ளன.

தொடரியல்

ஆங்கில மொழித் தொடரமைப்பை ஒட்டி இங்குத் தொடர்கள் விவரிக்கப்பட்டுள்ளன. 'ஆக்கம் ஆங்கில நாரால் அமையும்' (382). பலவகைத் தொடர்களும் தொடரில் அமையும்

முற்றுப்புள்ளி (.), முக்காற்புள்ளி (:), அரைப்புள்ளி (;), காற்புள்ளி (,), இரட்டை மேற்கோட்குறி (“ ”), ஒற்றைமேற்கோட்குறி, பிறைக்கோடு ( ( ) ), விடுகுறி (… ..), அம்புக்குறி (< —>) போன்ற குறியீடுகளும் ஆற்றின் ஓட்டம், கொண்டு கூட்டு ஆகிய பொருள்கோள்களும் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

செய்தி யுரைக்கும் செப்புத் தொடரும்
ஏவும் தன்மைக் கட்டளைத் தொடரும்
உணர்ச்சி காட்டும் உணர்ச்சித் தொடரும்
வினவிக் கேட்கும் வினாத்தொடரும் அவை (383).

பொருள் அடிப்படையில் தொடரை நால் வகைப்படுத்துகிறார் ஆசிரியர்.

எழுவாயின் செயலை முடிவுறக் கூறுகின்ற பயனிலையோடு முற்றுப் பெற்று, இருசொல் முதலாக நடப்பது தொடராகும் (384). கருத்து முற்றுப் பெறுவது முற்றுத்தொடர் (Sentence) எனும் விளக்கத்தை இற்நூற்பா ஒட்டி அமைந்துளது. முற்றுத் தொடரையே ஆசிரியர் தொடர் என்று சுட்டுகின்றார்,

எழுவாய் முதலிலும் பயனிலை ஈற்றிலும்
செய்பொருள் இடையிலும் அமைவது தமிழ்த்தொடர் (385)

என்ற நூற்பா செய்த ஆசிரியர், இம்முறை பிறழினும் தொடர்ப் பொருள் மாறுதல் தமிழில் இல்லை என்று உரைக்கின்றார். மேலும். The cat killed rat எனும் ஆங்கிலத் தொடரைச் சுட்டி, ஆங்கிலத்தில் முறை பிறழின் பொருள் மாறுதலைக் குறிப்பிடுகின்றார்.

எழுவாய் பயனிலை செயப்படு பொருள்கள்
நழுவி வருவதும் தொடர்பினா லுண்டே (393)

(நீ) இங்கே வா—எழுவாய்இல்லை (தோன்றா எழுவாய்)
(கதவைத்) தட்டினால் திறக்கப்படும்—செயப்படுபொருள் இல்லை
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை (விளையும்)—பயனிலை இல்லை

செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை, உடன்பாடு, எதிர்மறை எனும் வெவ்வேறு வினைவடிவங்கட்கேற்பத் தொடரமைப்பு மாறுதலை இந்நூல் (394) குறிப்பிடுகின்றது.

வினைப்பகுதியுடன் வி, பி விகுதிகளைச் சேர்த்தல், பகுதியின் மெல்லினத்தை வல்லினமாக்குதல், வல்லினத்தை இரட்டுதல் வழிப் பிறவினை அமைக்கலாம் (398).

வருவான் > வருவிப்பான்
பார்த்தான் > பார்ப்பித்தான்
மயங்கினான் > மயக்கினான்
தேறுகிறான் > தேற்றுகிறான்

வி, பி விகுதிகள் இயக்குவினைகளை (ஆட்டுவித்தான், காண்பித்தான்) அமைதலையும் இவ்வாசிரியர் பிறவினை என்றே கருதுகின்றார்.

சொல்லமைப்பின் அடிப்படையில் சிறுதொடர், கூட்டுத் தொடர், கலப்புத் தொடர் என்று தொடர் மூவகைப்படும் (403). இம்மூன்றும் முறையே Simple Sentence, Compound Sentence, Complex Sentence என்பவற்றின் மொழியாக்கமாகும். ஆசிரியர் Clause எனும் ஆங்கிலச் சொல்லைக் 'கிளவியம்' என்று பெயர்த்துள்ளார்.

இவை தவிர, நேர் கூற்று, அயற் கூற்று அமைப்பும், அவற்றை மாற்றும் முறையும் (410, 411) விளக்கப்படுகின்றன.

நிரல்நிரை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறி பாம்பு அடிமறி மாற்று, மொழி மாற்று, சுண்ணமொழி மாற்று என்பன கொண்டு கூட்டுப் பொருள்கோளுள் அடங்கும் என்று கொண்டு பொருள்கோள் ஆற்று ஓட்டம், கொண்டு கூட்டு என இரு வகைப்படும் என இந்நூல் கூறுகிறது (433).

முடிவுரை

தமிழ் நூல் நன்னூலின் சார்பு நூலாகும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். எனினும் இதன்கண் இக்கால மொழியியற் கருத்துக்களின் தாக்கமும் தனித்தமிழியக்கத்தின் தாக்கமும் ஆங்காங்கே ஊடுருவிக் காணப்படுகின்றன.

இக்கால மொழியில் காணப்படும் புதிய வழக்குகள் சில வற்றிற்கு இந்நூல் இலக்கணம் கூறுதலையும் காணமுடிகின்றது. எனினும் பழைமையைப் பேணுதல் எனும் மரபிலக்கணப் பண்பும் பெரும்பான்மையும் மிளிர்கின்றது.

# மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 25-00
5. பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி.சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. கோவை, கலம்பக நூல்கள் 12-00
    1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
    2. மதுரை மும்மணிக் கோவை
    3. சிராமலைக்கோவை
    4. கலசைக்கோவை
    5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
    6. திருவருணைக் கலம்பகம்
    7. குருமொழி வினாவிடை
12. உலா நூல்கள் 10-00
    1. திருவாரூருலா
    2. திருச்சிறு புலியூர் உலா
    3. விக்கிரம சோழனுலா
    4. கடம்பர் கோவில் உலா
    5. தேவையுலா
    6. புலவராற்றுப்படை
13. பாமாலை நூல்கள் 12-00
    1. திருப்பணிமாலை
    2. குடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
    3. திருக்குற்றாலமாலை
    4. திருப்புல்லாணிமாலை
    5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
    6. கேவசப் பெருமாள் இரட்டை மணிமாலை
    7. கலைசைச் சிலேடை வெண்பா
    8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி ( ,, ,, )
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள் 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

# செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்இதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 20-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச்-சேரத்தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன்பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும் நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை-1

திருப்பதி பிரிண்டர்ஸ், ★ மதுரை-1.